# நடப்பு நிகழ்வுகள்

1. தேசிய மற்றும் உலகளாவிய நிகழ்வுகள்
2. உலகு மற்றும் இந்தியா
3. பொருளாதாரம் மற்றும் வங்கியியில்
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
5. ராணுவம் மற்றும் பாதுகாப்பு
6. புகழ்பெற்ற நபர்கள் மற்றும் செய்திகளில் இடம்பெற்ற இடங்கள்
7. விளையாட்டுத் துறைச் செய்திகள்
8. நூல்கள் & ஆசிரியர்கள்
9. சமீபத்திய கலைச் சொற்கள்
10. உயரிய பணி நியமனங்கள்
11. இவரை அறிவோம்
12. விருதுகள்

APPOLLO STUDY CENTRE

**இந்தியாவில் மரங்களுக்கென்று முதன் முதல் ஆம்புலன்ஸ் வசதி:**

- மரங்களுக்கான பிரத்யேகமான ஆம்புலன்ஸ் வசதியை / சேவையை 27.05.2019 ல், சென்னையில், குடியரசுத் துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள் துவக்கிவைத்தார் இந்தியாவின் "பசுமை மனிதர்" Dr. K. அப்துல் கனி, இந்த மரங்களுக்கான சேவை நிறுவனத்தை நிறுவியுள்ளார்.

**இந்திய சேவையின் கீழ்க்காணும் பணிகள் அடங்கும்:**

- முதலுதவி, வேருடன் சாய்ந்த மரங்களை மீண்டும் நடுதல், விதை வங்கி, விதைக் கோள விநியோகம், செடி விநியோகம், மரம் வளர்க்க உதவுதல் மரங்களை இடம்பெயர்த்து வளர்த்தல், கணக்கெடுப்பு, முற்றிலும் பட்டுப்போன மரங்களை அகற்றுதல்.

**எல்லா விலங்குகளும் தன்னிச்சையாக புலம் பெயர்வதில்லை – முகாம்:**

- இந்த இயக்கம் இந்திய வனவிலங்குகளுக்கு இழைக்கும் வன்முறைத் தடுப்பு குழாம் மற்றும் - ஐக்கிய நாடுகளின் சபையின் - இந்தியாவில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பணிப் பிரிவு, ஏற்படுத்திய ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரம்.

- வன விலங்குகளை பாதுகாத்தல், அவைகள் உயிருக்குப் பயந்து இடம் பெயராமல் காத்தல், அவ்விலங்குகளின் மூலம் பெறும் பொருட்களுக்கு தடைவிதித்தல், வனவிலங்குகளின் அழிவவைத் தவிர்க்கும் உலகச் சந்தையில் விற்பனைக்காக, புலி, நட்சத்திர ஆமை, எறும்புண்ணி, டோக்யோ குருவி ஆகியவற்றை சட்ட விரோதமாக கொல்வதனால், சிலவகை விலங்கினங்கள் அழிய நேரிடும். எனவே அவற்றின் நிழற்படங்களை அறிவிப்பு பலகைகளாக வெளிப்படுத்தி, அவற்றைப் பாதுகாக்க வழிசெய்தல்.

**அனைத்து பள்ளிகளில் GRIHA (கிரிஹா) அமைப்பு செயல்படச் செய்தல்:**

- பள்ளிகளில் பசுமை தோட்டம் வாழ் உயிரினப் பாதுகாப்புக் குழு என்ற திட்டம், பகல் நேரங்களில் மட்டும் இயங்கும் பள்ளிகளில் 07.05.2019ல் செயல்முறைக்கு வந்துள்ளது. அத்திட்டத்தின் கீழ் பள்ளிகளின் சூழல் பாதுகாப்புப் பங்களிப்பு மதிப்பிடப்படும்.

- தற்போதுள்ள பள்ளிகள் இம்மாதிரியான மதிப்பீடு செய்தல் மூலம், மாணவர்கள், பசுமையான சூழல், பல்லுயிர்களின் வாழ்க்கையை உறுதிசெய்வது, எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமை ஆகியவற்றின் முக்கியத்துவம் உணர்ந்து செயல்பட உதவும்.

**ஒரிசா மற்றும் மேற்கு வங்கத்தில் அண்மையில் ஃபனி புயலின் தாக்கம்:**

- கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவு மிகக் கடுமையான புயல் கிழக்குக் கடற்கரையை அண்மையில் தாக்கியது. அச்சமயம் காற்று மணிக்கு 240 – 250 கி.மீ வேகத்தில் வீசியது.

- (Fani) ஃபானி என்றால் பாம்பு, இப்பெயர் வங்கதேசத்தால் பரிந்தரைக்கப்பட்டது.

- இந்த கடும்புயலில், 10,000 கராமங்களும் 52 நகரங்களும் ஒரிசாவில் பாதுகாப்புக்கு இலக்காகின.

- ஃபானி என்ற இந்தச் சொல், இந்தியா, இலங்கை இந்துமகா சமுத்திரத்தின் வடக்கே உள்ள வங்கதேசம், மாலத்தீவுகள், மயன்மார், ஓர்னான். பாகிஸ்தான் மற்றும் தாய்லாந்து ஆகிய எட்டு கோடுகள் பரிந்துரைத்த 64 பெயர்களின்று தேர்வு செய்யப்பட்டது.

**மின்வண்டிகள் அனைத்திற்கும் பசுமை நிற எண் தகடு கட்டாயமாக்கல்:**

- மின்சாரம் மூலம், இயங்கும் அனைத்து வாகனங்களுக்கும் பச்சை நிறத்தினாலான எண் / உரிமத்தகுடு பொறுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- தகட்டின், எழுத்துரு தனியார் வண்டிகளில் வெண்ணிறத்திலும் வாடகை / வணிக நோக்கிலான வண்டிகளில் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். பசுமைத்தகடு, ஐந்தாம் வகையான எண் தகடு ஆகும்.

- மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு, (இலவசமாக) வாடகை இல்லாத நிறுத்துமிடம், நெருக்கடி மிக்க இடங்களில் கட்டுப்பாடற்ற நுழையும் வசதி, நெடுஞ்சாலை சலுகையுடனான கட்டணம் போன்ற தனிச் சலுகைகள் வழங்கப்படும்.

**FAMF II (ஃபேம் 2) திட்டம் பற்றிய சில குறிப்புகள்:**

- இந்திய வர்த்தக சபை (CII) துரிதமாக அதி நவீன, மிகச்சக்தி வாய்ந்த / மின்னாற்றலால் இயங்கும் வாகன உற்பத்தியை, மேற்கொள்ளல் திட்டம்

- இத்திட்டம் / நடைமுறைப்படுத்துவதன் மூலம் 64% சதவீத எரிசக்தி தேவைகளை குறைக்கலாம் 37 சதவீத கரும்புகையையும் 2030 ஆம் ஆண்டுகள் குறைக்கலாம்.

**புதிய கண்டுபிடிப்புகள் - புதுத் தொழில் முனைவோருக்கான திருவிழா – தொடக்கம் FINE – 2019:**

- FINE 2019 என சுருக்கமாக அழைக்கப்படும் Feshval of Innovation and Entrepreneurship திருவிழா 15.03.2019 அன்று, காந்திநகர், குஜராத்தில், குடியரசுத்தலைவர் மேதகு ராமநாத் கோவிந்த் அவர்களால் துவக்கப்பட்டது.

- அவ்வமயம், பத்தாவது, மூலாதாரக் கண்டுபிடிப்புகளுக்கான, இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை அளிக்கப்படும் விருதுகளை வழங்கினார்.

- மைய அரசின், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையின் துணை கொண்டு, 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து, இந்த விருது வழங்கும் விழா முதன் முறையாக, நான்கு நாட்களுக்கு, குடியரசுத்தலைவர் மாளிகைக்கு வெளியே நடந்தேறியது.

**ராம் ஜன்மபூமி – பாப்ரி மஸ்ஜித் நிலத் தகராறு:**

- அயோத்தியாவில் - ராம் ஜன்மபூமி – பாப்ரி மஸ்ஜித் நிலவழக்கிற்கு ஒரு நிரந்த தீர்வு காண்பதற்காக, உச்ச நீதிமன்றம் 8.3.2019 அன்று மூன்று உறுப்பினர் அடங்கிய நடுவர் குழுவை நியமனம் செய்துள்ளது.

- FMI – கலிபுல்லா, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி, இக்குழுவில் தலைவராக இருப்பார்.

- ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், ஆன்மீகத் தலைவர், மற்றும் மூத்த வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சுவும் உறுப்பினராக இருப்பர்.

## PM STIAC – Nine Mission of National Importance

- பிரதமரின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்குழு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்பது இலக்குகளை 08.03.2019 அன்று வெளியிட்டது.

- செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence)
- பெரும் சத்தி மிகு கணிணி பயன்பாடு (Quantum Computing)
- மின் சக்தியால் இயங்கும் வாகனங்கள்.
- ஆழ்கடல் ஆய்வுகள்.
- தேசிய உயிரியல் பன்மயம்
- உடல்நலம் காக்கும் உயிரியில்
- கழிவுப் பொருள்கள் கொண்டு ஆக்கபூர்வமான பொருள் உற்பத்தி அக்னி ஏவுகனை.

- பாரத மின்னியல் கழகம் (BEL) SWAGAT என்ற புதுத்திட்டத்தை உருவாக்கியுள்ளது – தானியங்கி பயணக் கட்டணம் வசூலிக்கும் இயந்திரம்.
- பிரதமர் இத்திட்டத்தை 06.03.2019 அன்று அகமதாபாத் மெட்ரோ – பயணியருக்கான துவக்கத்தின் போது, அறிமுகப்படுத்தினார்.
- இத்திட்டம், மைய அரசின் வீட்டுவசதி மற்றும் உள்நாட்டுத் துவக்கத்தின் போது, அறிமுகப்படுத்தினார்.
- இத்திட்டம், மைய அரசின் வீட்டுவசதி மற்றும் உள்நாட்டுத் துறை அமைச்சகம், பாரத மின்னியல் கழகம், அதிநவீன கணினி பயன்பாடு மற்றும் வளர்ச்சித்துறை, டில்லி மெட்ரோ குழூாம், தேசிய பணகொடுப்பு நிறுவனம் மற்றும் பாரத வங்கியின் கூட்டுமுயற்சியில் உண்டானது.

**ஒரு தேசம் ஒரு கார்டு**

## (One Nation One Card)

- நாடு முழுதும் பயணம் மேற்கொள்பவர்களுக்கு, உபயோக்கத் தகுந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள கார்டு. இதன் துணைகொண்டு மெட்ரோ, பஸ், புறநகர் ரயில் சேவை, சுங்கவரி, வண்டி நிறுத்துமிட வாடகை, மற்றும் சில்லரை வியாபாரம் என ஒரு கார்டில் அனைத்து சேவைகளும் பெற ஏதுவாக உள்ளது. இது 04.03.2019 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

- இது மூன்று பிரிவுகளைக் கொண்டது.
  1. NCMC – தேசிய பொதுவான எல’லா இடங்களிலும் உபயோகத்தக்க ஆற்றல் கொண்டது.
  2. SWEEKAR – பணத்தொகை வசூலிக்கும் மென்பொருள்
  3. SWAGAT – தானியங்கி நுழைவாயிலில் உபயோகிக்கும் கார்டு

- NCMC - தேசிய பணங்கட்டும் நிறுவனத்தின் படைப்பு.
- SWAGAT – ஒரு இந்தியக் கம்பெனியின் உருவாக்கம்

**பிரதமரின் JI-VAN திட்டம்**

- இத்திட்டம் மத்திய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்று 04.03.2019 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் மீண்டும் பயன்படுத்தும்: சுழற்சிமுறை, உயிரியல் எரிசக்தி உற்பத்திக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- இது 2G ஈதனால் உபயோகித்தலை மேம்படுத்தி சூழல் பாதுகாப்பை உறுதிசெய்யும் திட்டமாகும்.

**துறைசாரா – உணவுப்படுத்துவோருக்கான திட்டம்**

- கிராமப்புற, உணவு பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டம். ஏறக்குறைய 66 சதவித உணவுப் பொருள் பதப்படுத்தும் சிறுநிறுவனங்கள் கராமங்களில் உள்ளன. அவற்றில் 80 சதவீதம் குடும்ப உறுப்பினர்களாலேயே நடத்தப்படுகின்றன.

- உலக வங்கி ரூ.3000 கோடி நிதி, கீழ்க்கண்டதொழில்களுக்கு வழங்க உள்ளது:

- குடிசைத்தொழில், உழவர்கள் கூட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் திறன் மேம்பாடு உயரிய தொழில் நுட்ப அறிமுகம், புதிய தொழில் முனைவோருக்கு ஊக்கமளித்தல், வயலினின்று நேரடியாகச் சந்தைக்குக் கொணர்தலுக்கு வழிவகுத்தல்.

**பிளாஸ்டிக் இல்லா இந்தியா – முழக்கம்**

- மத்திய அமைச்சர் ஹர்ஷவர்தன், பிளாஸ்டிக் இல்லா இந்திய 2022 என்ற முழக்கம் மூலம், பிளாஸ்டிக் மறுசுழற்சி மற்றும் சூழல் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு பற்றிய கருத்துக்களை வலுயுறுத்துகிறார்.

- “பிளாஸ்டிக் கழிவு இல்லா இந்தியா” முழக்க கீதம், பண்டிட் தீதையாள் உபாத்யாயா ஸ்மிருதி மான்ச் (PDUSM) என்ற ஒரு தொண்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. அந்நிறுவனம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல சமூகப்பணிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

- இந்த கீதம் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய 8 மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

**பிரணாம் குழு**

- மாநில அரசுப் பணியாளர்கள், தங்கள் பெற்றோர்களை, பொறுப்போடு கவனித்துக் கொள்ள ஆவன செய்வதற்காக, அசாம் முதல்வர் ஸார்பானந்தா சோனாவால், இந்த Parents Responsibility and Norms for Accountability and Monitoring (PRANAM) குழுவினை அமைத்தார்.

- இந்த ஆணையின்படி, மாநில அரசுப் பணியாளர்கள், தங்கள் பெற்றோர் மற்றும், உடல் ஊனமுள்ள உடன் பிறந்தோர் கவனிக்கப்படவில்லை எனப் புகார் வந்தால், உடனடியாக சம்பந்தப்பட்ட ஊழியரின் சம்பளித்திலிருந்து 10-15 சதவீதம் பெற்றோரைச் சென்றடையச் செய்வார்கள்.

- இதன் மூலம் 4 லட்சம் அரசுப்பணியாளரின் பெற்றோர் பயனடைவர். இவ்வாறு முதன் முதல் அறிமுகப்படுத்த இந்த சட்டம், மாநில அரசால் 2018ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**SWAYATT திட்டம் - வணிகத்துறையின் முயற்சி**

- இது ஒரு புதுயுக்தி, புது நிறுவனங்கள் உருவாக்க, மத்திய அமைச்சர் சுரேஷ் பிரிவு 19.02.2019, இதை நடைமுறைப்படுத்தினார். பெண்கள் மற்றும் இளைஞர்கள் மின்னணு முறை – பிரிவர்த்தனைகளை, அரசு சம்பந்தப்பட்ட சந்தைகளிலும் நிர்வகிக்க வழி வகுக்கிறது.

- இது 2016ல் உருவாக்கப்பட்டது. இது ஒரு இணையவழி வியாபார சாதனம். அரசு சம்பந்த கொள்முதல்களை இதன் மூலம் செய்ய உருவாக்கப்பட்டது.

**இந்தியாவின் முதல் வைராலஜி சிறப்பு நிறுவனம்**

- இந்தியாவின் முதல் அதிநவீன வைராலஜி (வைரஸ் பற்றி ஆராய்ச்சி) நிறுவனம் கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் முதல்வர் பினராயி விஜயன் அவர்களில் 11.02.2019 அன்று துவங்கப் பெற்றது.

- உலக வைரல் நெட்வொர்க் உடன் இணைந்து பணிபுரியும். உலக வைரல் நெட்வொர்க், 29 நாடுகளில் 45 மையங்களில் சிறப்பாகச் செயல்படுகிறது. May 2018ல், சேர்ந்த நிப்பா வைரஸ் தொற்றை, அடுத்து, இந்த அறிவிப்பு ஏற்பட்டது.

**முகநூல் தொடங்கியது – எண்ணியல் திறன்மேம்பாடு முயற்சி**

- GOAL (Going Online As Leader) என்ற ஒரு புதுயுக்தியை முகநூல் அறிமுகப்படுத்தியுள்ளது. மேற்குவங்கம், மஹாராஷ்டிரா, ஜார்கண்ட், ஒடிஷா மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் 07.02.19ல் இருந்து இப்புதிய முயற்சி செயல்படுகிறது.

- GOAL - மூலம், மேற்சொன்ன ஐந்து மாநிலங்களிலுள்ள இளம் பெண்களுக்கு எண்மயகணினி பற்றிய அறிவு, வாழ்க்கைக் கல்வி, தலையமைப்பண்பு மற்றும் தொழில் முனைவோராகுதல் ஆகியவற்றில் உாயி பயிற்சி அளிக்கப்படும்.

- இந்த முன்னோடித் திட்டம், பள்ளிப்படிப்பை பொருளாதாரக் காரணங்களால் தொடர இயலாமல், பாதியில் நிறுத்திய பெண்களுக்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டு மையங்களுக்கு அருகில் வசிப்பவர்களைத் தேர்வுசெய்து, அவர்களது பங்கேற்றலை உறுதிசெய்கிறது.

**உலகின் மிகப்பெரிய “ஆரோக்கியபாரதம் யாத்ரா” நிறைவுற்றது**

- உலகின் மிகப்பெரிய இந்த யாத்திரை 29.01.2019 அன்று டில்லியில் முடிவுற்றது. மக்களை சரியான உணவை உண்டு ஆரோக்கிய பேணவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதே இதன் நோக்கம்.

- இந்திய மக்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கான ஒரு விழிப்புணர்வுத் திட்டம். உணவுப்பாதுகாப்பு மற்று தரநிர்ணயக் குழுவின் நல்லதோர் திட்டம்.

- 16.10.2018 அன்று இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு (FSSAI) நிறுவனத்தால் துவக்கப்பட்ட இந்த யாத்திரையில், தமிழகம், சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டு, பெருமை பெற்றது.

**இந்தியாவின் 70வது குடியரசு தினம்**

- 26.01.2019, டில்லியில் 70வது குடியரசுதினக் கொண்டாட்டம் நடைபெற்றது. தென் ஆப்ரிக்காவின் குடியரசுத்தலைவர் மடமாலா சிரில் ராம்போசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், 1995ல் நெல்சன் மண்டேலாவிற்கு பிறகு, இரண்டாவதாக ஒரு தென் ஆப்ரிக்க குடியரசுத்தலைவர் இவ்விழாவில் பங்கேற்றார், இவ்விழாவில் தேசப்பிதாவின் 150வது பிறந்தநாள் சிறப்பு நிகழ்வுகளும் உள்ளடங்கியிருந்தது.

- இந்தியப்படையில் முதன்முதல் சங்க நாதம் முழக்கப்பட்டது. தலைமையேற்று நடத்தினார். டேர்-டெவில் - மோட்டார் வாகன. குழுவிலும் ஒரு பெண் அதிகாரி முதன்முறைாகப் பங்கு கொண்டார்.

- அஸ்ஸாம் துப்பாக்கி சுடும் குழுவில் அனைத்து உறுப்பினர்களும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 33 விமானங்களும் 4 ஹெலிகாப்டர்கள் பறந்தன. M777 ம் இடம்பெற்றது ஹௌவிட்ஸர் மற்றும் K9 வஜ்ரா, போன்ற தானியங்கி ஆயுத வாகனங்களும் இந்திய ராணுவத்தில் அறிமுகமாயின.

- நாட்டின் உயரிய விருதான “அசோக் சக்ரா” லான்ஸ் நாயக் நஸீர் அகமது நாயக் வானிக்கு வழங்கப்பட்டது. இவர் காஷ்மிரை சேர்நத முதல் நபர்.

- முதன்முறையாக 90 வயதுக்கு மேற்பட்ட 4 முன்னாள் வீரர்கள் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

- முதல்முதலாக ‘ராஷ்டிரிய பல் புரஸ்கார்” விருது பெற்றவர்கள், குடியரசுதின அணிவகுப்பில் பங்கேற்றனர்.

**RPF - பெண்கள் படை ஜோதி பஹினி துவக்கப்பட்டது**

- வடரயில்வே, 19.01.2019 அன்று பெண்துயணியரின் பாதுகாப்புக்கென, முழுதும் பெண்களே கொண்ட படையை துவக்கியுள்ளது.

- இதன் பணி கௌஹாத்தி – காம்க்யாவில் ஆரம்பிக்கப்பட்டது. இப்படைக்கு 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, வீரமங்கை ‘அஹாம்’ இனபெயர் சூட்டப்பட்டது.

**தேசிய அளவிலான இரு முன்னோடித் திட்டங்கள் தீட்டப்பட்டன**

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன, அறிவியல் தொடர்பு சம்பந்தமான இரு தேசிய அளவிலான முன்னோடித் திட்டத்தை 15.01.2019 அன்று துவக்கி வைத்தார். அவை தூர்தர்ஷன் DD அறிவியல் மற்றும் இந்திய அறிவியல். இவை பிரசார் பாரதி (DD) மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டன. இந்தியாவை தொழில்நுட்பத்தை உலக அரங்கில் உயர்த்தும்யுக்தி. ஹீனர் ஹாத் - பொருட்காட்சி – முன்னாள் சிறுபான்மையினர் நல அமைச்சர் முக்தா அப்பாஸ் - கைவினைக் கலைஞர்களின் தயாரிப்புகளுக்கான பொருட்காட்சியை 14.01.2019 புதுதில்லியல் துவங்கினார். இந்திய கைவிஞைர்களுக்கு, மிகச்சிறந்த வர்த்தக மதிப்பு கிடைத்தது.

- ஹீனர் ஹாத் கண்காட்சி, பாரம்பரிய கலை.׃. கைவினைப்பொருட்களில் உற்பத்தியா திறன்மேம்பாடு மற்றும் பயிற்சி அளிக்கும் மகத்தான் திட்டமிடப்பட்டது.

**தூயகாற்று – தேசிய அளவிலான ஒரு நிகழ்வு**

- தேசிய தூய காற்று திட்டம் (NCAP) அப்போதைய சுற்றுச்சூழல் அமைச்சர் ஹர்ஷ் வர்தனால் 10.01.2019 அன்று துவங்கப்பட்டது.

- NCAP - காற்று மாவை அகற்றி, சுகாதாரமான சூழலை மிகவிரைவில், உறுதிப்படுத்துவதற்கான தேசியத் திட்டம். இதன் மூலம் காற்றில் கலந்துள்ள நுண்ணி மாசுகளை 20% சதவீதமும், சில மாசுத்துகள்களை 30 சதவிதமும் 2024 க்குள் குறைத்து, தூய சூழலை உருவாக்கும் திட்டம் 2017 இருந்த நிலைப்பாட்டுடன் ஒப்பீடு செய்யப்படும்.

**இந்தியாவின் மிக நீளமாக இரும்புக் கம்பிகளாலான**

**தொங்கு பாலம்**

- அருணாச்சல பிரதேச முதல்வர், பிரேம் காண்டு, 300 மீட்டத் நீளமுள்ள, சியான் நதியின் குறுக்கே கட்டுப்பட்டுள்ள தொங்குபாலத்தை 09.01.2019 அன்று, மக்கள் உபயோகத்திற்கு திறந்துவைத்தார். இது சீன எல்லையில் உள்ளது.

- இது 4843 கோடி ரூபாய் செலவில், வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சி நிதி மூலம் கட்டப்பட்டது.

- இதன் மூலம் யிங்கியாங்க் to டட்டிங் கடளன் இடையிலான தூரம் சுமார் 40கிமீ தூரம் குறையும்.

**அஸ்ஸாம் ஒப்பந்தம் - MP பேஸ்பருவா குழு**

- மைய அரசின் உள்துறை அமைச்சகம், ஒரு உயர் மட்டக் கமிட்டியை 05.1.2019, அன்று அஸ்ஸாம் ஒப்பந்தம், பிரிவு – 6 ஐ அமல்படுத்துவதற்காக அறிவித்தது.

- அஸ்ஸாமி ஒப்பந்தம், பிரிவு 6ன்படி, சட்டபூர்வமாகவும், அரசியலமைப்பு சட்டம் மூலமாகவும், அஸ்ஸாம், மக்களின் கலை, கலாச்சார, சமூக, மொழி, ஆகியவை பாதுகாக்கப்படவேண்டும.

**தகவல் தொடர்பு – கைபேசி செயலி – சட்டத்துணைவன்**

- நியாய பந்து என்ற கைபேசி செயலி, மைய அரசின் சட்டம், நீதி அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அவர்களால் 19.02.2019 அன்று செயல்படுத்தப்பட்டது.

- இதன்மூலம் வழக்குறைஞர்களை, பயனாளிகள் எளிதில் தொடர்பு கொள்ளலாம்.

- இதன்மூலம் ஏற்கனவே பதிவு செய்து வழக்குகளைக் கூட, இணையம் மூலம் மறுபதிவு செய்து, பதிவுபெற்ற வழக்குறை அறிஞர்களிடம் கானொலி அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**உள்நாட்டு நீர்வழி ஆணையம் - LADIS – என்ற வலைவாசல் (Portal) செயல் துவக்கம்**

- மேற்கண்ட புதிய வலைவாசல் 15.02.2019 அன்று செயலாக்கப்பட்டது. இதன் உதவிகொண்டு தேசிய நீர்வழிகளின் ஆழம் போன்றவற்றை வேண்டிய தருணத்தில் அறிய முடியும்.

- இது கப்பல் மற்றும் சரக்குக் கப்பல் உரிமையாளருக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

- தேசிய நீர் வழிகளை, உன்னதமான அளவு உபயோகித்துப் பயன்பெறலாம். நீர் வழியின் ஆழம் உறுதியாக அறிய முடிந்தால், கலங்களை வழிநடத்துவது சுலபமாக இருக்கும்.

**கைபேசி செயலி மூபார்ம் செயலாக்கம்**

- மாநில விவசாயம் மற்றும் விவசாயிகள் நலம் அமைச்சராக இருந்த அமைச்சர், கஜேந்திர சிங்செகாவத், இந்த மூபார்ம் என்ற செயலியை 07.02.2019 அன்று நடைமுறைப்படுத்தினார். பண்ணை விவசாயிகள் இதன் மூலம் ஆலோசனை பெற இயலும்.

- ஒரு தன்னிறைவு பெற்ற பசு/மாடு வளர்க்கும் ஒரு சமூகம் இணைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு பெருகும். பெண்களின் ஆக்க சக்திபெருகும், வருமானமும் உயரும்.

**DIGICOP கைபேசி செயலி – சென்னை காவல்துறையின் அறிமுகம்**

- இந்த செயலிமூலம் திருட்டுப்போன இருசக்கர வாகனம் மற்றும் கைபேசியைத் தேட, தடயங்கள் பெறலாம்.

- DIGI – COP - செயலி, உபயோகித்த கைபேசியை வாங்கும்போது, அது திருடப்பட்டது அல்ல என்பதை உறுதி செய்துகொள்ளலாம்.

- காணாமல் போன இருசக்கர வாகனத்தை தேடுவதற்கும், அருகிலுள்ள காவல் நிலையும் எது என அறியவும், போக்கு வரத்து எச்சரிக்கைகள், காவல்துறை பற்றி செய்திகள் அறியவும் இந்த செயலி பயன்படும்.

**Womaniya – அரசு இணையவழி சந்தை – முன்னோடித் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவுக்கான திட்டம்**

- அரசு இணையவழி சந்தை – முன்னோடித் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவுக்கான திட்டம் 14.01.2019 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் மூலம், அரசுக்கு, நேரடியாக கைவினைப் பொருட்கள் கைத்தறிப்பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்யலாம்.

- பெண்கள் பாகுபாடின்றி பலதொழில்களைத் துவங்க பல உதவிகளை அரசு செய்கிறது. அரசுக்கு சொந்தமான ஒரு அமைப்பு.

**Web Wonder Women:**

- பெண்கள் மற்றும் குழந்தை நல அமைசகத்தின் இணையவழித் திட்டம்:

- இத்திட்டம் சமூக வலைத்தளங்கள் மூலம் நல்ல பல மாற்றங்களையும், பயன்பாடுகளை வெளிக்கொணரும், பெண்களைக் கண்டறிந்து, அவர்களது சாதனைகளை அங்கீகரித்துப் பாராட்டுவதற்கான ஒரு புதிய முயற்சி.

- Berate through மற்றும் Twitter India வின் கூட்டுமுயற்சியின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்

**SHREYAS - திட்ட அமல்:**

- மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த பிரகாஷ் ஜவேட்கார், உயர்கல்வி பயிலும் இளைஞர்களுக்கான திறன் வளர்க்கும் இத்திட்டத்தை நிறுவினார்.

- இதன் மூலம் இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில், பட்டப் படிப்பை முடிக்கும் இளைஞர்களும் பணிப்பயிற்சி வாய்ப்புக்கள் NAPS திட்டம் மூலம் உருவாக்கப்படும்.

- SHREYAS - மனிதவள மேம்பாட்டுத் துறை, திறன்மேம்பாடு மற்றும் தொழில் முன்வோருக்கான துறை, வேலைவாய்ப்புத் துறை ஆகிய மூன்றும் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

**காந்தமால் ஹால்தி – புவிக்குறியீட்டு உரிமைச் சீட்டு:**

- காந்தமால் ஹாலதி, மத்திய வணிகத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அறிவுசார் சொத்துப் பிரிவின் இடமிருந்து புவிக்குறியீட்டு உரிமை பெற்றார் (03.04.2019) தெற்கு ஒரிசாவின் விளையும் ஒருவகை மஞ்சள், அதிலுள்ள மருத்துவக் குணங்களுக்காக அதற்கு உரிமைச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

- ஒரிசாவில் விளையும் 75 பொருட்களுக்கு ஏற்கனவே புவிசார்க்குறியீட்டு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் “First Coffee” மற்றும் நான்கு காப்பி வகைகளுக்கு புவிசார் குறியீட்டு உரிமம்.

- புவிசார் குறியீட்டுப் பதிவு மையம், இந்தியாவின் காபி வகைகளுக்கு 01.03.2019 அன்று உரிமச்சீட்டு வழங்கியுள்ளது.

    1. கூர்க் அராபிக்கா காபி
    2. வயநாடு ரோபஸ்டா காபி
    3. சிக்மகளூர் அராபிக்கா காபி
    4. பாப்புதாங்கிரிஸ் அராபிக்கா காபி

- கூர்க் அராபிக்கா காபி குடகு, கர்நாடகாவில் பயிரிடப்படுகிறது.

- வயாநாடு ரோபஸ்டா காபி – கேரளா, வயநாட்டிலும் சிக்மளூர் அராபிகா, மற்றும் பாபுடாங்கிரிஸ் அராபிக்கா சிக்மகளூர், கர்நாடகாவில் பயிரிடப்படுகிறது.

**ஈரோடு மஞ்களுக்கு புவிசார் குறியீட்டு உரிமம்:**

- ஈரோடு மாவட்டத்தில் பயிரிடப்படும் மஞ்சளுக்குப் புவிசார் குறியீட்டு உரிமம், புவிசார் குறியீட்டு மையத்தில் பதிவு செய்யப்பட்டது. (13.03.2019)

- தமிழ்நாட்டில் பெரிய நாடன் / சிறுநாடன் என்ற இருவகை மஞ்சள் பயிரிடப்படுகிறது. அதில் சின்னநாடன், ஈரோட்டில் விளைகிறது

**STARS திட்டம்:**

- மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த உயர் திரு பிரகாஷ் ஜாவேட்கர், தேசிய அறிவியல் நாளன்று, 28.02.2019ல் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்.

- Science for Translational and Advanced Research in Science - அறிவியல் திட்டங்களுக்கு நிதி வழங்கும் திட்டம் இந்தி அறிவியல் கழகம், பெங்களூரு, இணைந்துசெயல் பட இருக்கும், சுமார் 500 அறிவியல் திட்டப்பணிகளுக்கு இந்த நிதிபயன்படுத்தப்படும்.

- தேசிய அறிவியல் தினம் பிப்ரவரி 28ம் தேதி ஊ.ஏ. ராமன் அவர்களின் நினைவாக, அவரது ராமன் விளைவுகளைப் போற்றி நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.

**Pradhan Mantri Kisan Sanman Nidhi Scheme:**

**பிரதமரின் - விவசாயிகளுக்கு உதவிநிதித் திட்டம்:**

- பிரதமர் மோடி அவர்களால் 24.02.19 அன்று, உத்திரப்பிரதேசம் - கோரக்பூரில் இத்திட்டம் அமலாக்கப்பட்டது.

- 2 ஹெக்டேருக்கு குறைவாக நிலமுள்ள விவசாயிகளுக்கு வருடத்துக்கு ரூபாய் 6000 வழங்கப்படும். இத்தொகை 3 தவணைகளில் (Rs. 2000 ஆக) வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படும்.

**Pravasi Teerth Dershan Yojana:**

**இது ஆன்மிக சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான திட்டம்:**

- இத்திட்டத்தின், அரசு ஏற்பாடு செய்யும், ஆண்டுக்கு இருமுறை, வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான ஆன்மீகப் பயணத் திட்டம்.
- அரசு 25 நாட்களுக்கான பயண ஏற்பாடுகளை வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு, விமானக்கட்டணம் உட்பட அனைத்துச் செலவுகளையும் ஏற்கும்.
- மொரிஷியஸ் பிஜிஸ், சூரிநாம், கயானா, திரினிதாத், போகோ, ஜமாய்தோ வாழ் இந்தியர்களுக்கு முன்னுரிமை அளிக்கபடும்.
- 45 முதல் 65 வயதுக்கு உட்பட்ட இந்திய வம்சாவளியினர் விண்ணப்பிக்கலாம்.

**Fintech 2019 Conclave:**

- நித்தி ஆயோக் (NITT AYOG) 25.03.2019 அன்று புதுடில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் பன்னாட்டு மையத்தில் ஒருநாள் நிதித்துறையில் தொழில்நுட்பம் என்ற ஒரு நாள் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது.
- அந்த மாநாடு ரிசர்வு வங்கியின் தலைவர் திரு சக்தி காந்த தாஸ் அவர்களால் துவக்கப்பட்டது.
- தொடர்ந்து நிதித்துறையில், அதிநவீனத் தொழில் நுட்பங்களைக் கொண்டு செயலாற்றுவது, எதிர்காலத் திட்டங்கள், மற்றும் அனைத்துத் தரப்பு மக்களையும், இணைக்கும் வண்ணம் செயல் திட்டங்கள் தீட்டுவது என்பது இந்த ஒரு நாள் கருத்த ரங்கின் நோக்கமாகும்.

**BIO – ASIA 2019:**

- பதினாறாவது BIO – ASIA விழா, பிப்ரவரி 25 முதல் 27 வரை ஹைதராபாத், தெலுங்கானாவில் சிறப்பாக நடைபெற்றது.
- இது ஆசியாவின் மிகப்பெரிய உயிரியல் தொழில் நுட்பம் மற்றும் உயிரியல் சம்பந்த அறிவியல் பிரிவு ஆகியவற்றிற்கான அமைப்பு "Disrupt Lisf Science 4.0 the Disrupt" உயிரியல் 4.0 தடைகளைத் தகர்த்திடுவோம்" என்பது இந்த மூன்றுநாள் கருத்தரங்கின், விவாதங்களுக்கான கருப்பொருள்.

**3rd Edition of VIVID 2019:**

- மூன்றாவது "விவித் - விஷன் இன்ஸைட் மற்றும் வாய்ஸஸ்" மாவட்ட அளவிலான தொழில் நுட்பத் துணை கொண்டு தகவல் அளிக்கும் அமைப்பின் கூட்டத்தொடர், தேசிய தொழில் நுட்பமும் தகவல் பெறும் மையம் மூலம் பிப்ரவரி 21 மற்றும் 22 2019 ல் நடைபெற்றது.
- மத்திய அரசின் மின்னணு மற்றும் தொழில் நுட்பம், சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராக இருந்த ரவிசங்கர் பிரசாத் இந்த விழாவை துவக்கி வைத்த விருதுகளை வழங்கினார்.
- அவ்வமயம் "டிஜிட்டல் இந்தியா காம்பென்டியம்" என்று நூலை வெளியிட்டார் மற்றும் டிஜிதன் மித்ரா சாட்வாட் மற்றும் டெக்னாலஜி இன்குபேஷன் மற்றும் புதிய தொழில் முனைவோரை ஊக்குவித்தல் (TIDE 20) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**இண்டாம் தேசிய மாநாடு SEIP**

- இரண்டாவது (நீடித்த, சூழலுக்குகந்தா தொழிற்சாலை உற்பத்தி) என்ற திட்டத்தை பற்றிய மாநாடு புதுதில்லியில் பிப்ரவரி 15, 2019 ல் நடைபெற்றது.

- இந்திய மத்திய சூற்றுச்சூழல், வனத்துறை, மற்றும் தட்ப வெப்ப மாறுதல் சார்ந்த அமைச்சரவை மற்றும், இந்திய ஜெர்மன் கூட்டுக்குழுவால் இந்தமாநாடு நடத்தப்பட்டது.

**World Sustainable Development summit (WSDS):**

- உலகளாவிய நிலைத்த வளர்ச்சி பற்றிய உச்சி மாநாடு 2019 குடியரசுத் துணைத் தலைவர், வெங்கைய நாயுடு அவர்களால் புதுதில்லியில் துவங்கப்பட்டது. பிப்பரவரி 11 முதல் 13 வரை நடைபெற்றது.

- இம்மாநாட்டின் கருத்து – 2030 க்குள், நம் அனைத்து உறுதிமொழிகளையும் செயல்படுத்துவோம்.

- பிஜிநாட்டு பிரதமர் யென்னிமரமாவுக்கு நீடித்த வளர்ச்சி மற்றும் தலைமைப்பண்புக்கான 2019 ஆம் ஆண்டு விருது வழங்கப்பட்டது.

- TERI (The Energy and Resources Institute) ன் ஆண்டுதோறும், நடத்தப்படும் மிகப்பெரிய நிகழ்ச்சியாகும். நீடித்த நிலையான வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் பற்றிய விவாதத்துக்கான ஒரு பொதுமேடை இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி.

**GLOBAL COOLING COLLISION:**

- 2030 Agenda – மற்றும் கோபன்ஹேகளில் நடந்தேறிய கூட்டுமுயற்சி பற்றிய உலக மாநாடு, உலகில் குளிர்ச்சியான சூழல் உண்டாக்குதல் பற்றிய கரத்தில் நடந்தேறியது.
- இது ஐக்கிய நாடுகள் சபை – தட்பவெப்பம் - தூய காற்றுத்துறை உதவியுடன் நீடித்த. நிலையான வளர்ச்சிபற்றிய நிகழ்வுகள் நடந்தேறின.

**அயர்லாந்து வானிலை குறித்து அவசரநிலைப் பிரகடனம்:**

- அயர்லாந்து, தட்பவெப்பசூழல் குறித்த நெருக்கடி நிலை பற்றிய பிரகடனத்தை மே 11ம் நாள் அறிவித்தது.

- இங்கிலாந்து (UK) முதலில் இந்த பிரகடனத்தை மே மாத ஆரம்பத்தில் செய்தது. அயர்லாந்து இதைச் செய்த இரண்டாம் நாடாகும்.

- இது ஐரிவு பாராளுமன்ற, காலநிலை குறித்த அறிக்கையின் விளைவாக ஏற்பட்ட நிகழ்வு.

**உலகின் மிகப்பெரிய உப்புக் குகை கண்டுபிடிக்கப்பட்ட்து**

- இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த குகை ஆய்வாளர்கள், உலகின் நீளமான மால்ஹம் என பனிக்குகையை கருங் கடலுக்கு (Dea sea) அருகில் கண்டுபிடித்துள்ளனர்.

- இது முந்தைய பதிவுகளை (Record) முறியடித்தது.

- இக்குகை இஸ்ரேலின் மிகப்பெரிய மலை “சோடம்” நடுவில் கருங்கடல் தெற்மேற்கு ஓரமாக உள்ளது.

**இத்தாலி பெல்ட் & ரோட் (Belt and Road) ல் இணைப்பது**

- சைனாவின் பெல்ட் மற்றும் ரோடு எனும், அந்நாட்டுடன் ஆன உறவுக் கொள்கையில், G7 குழுமத்திலுள்ள இத்தாலி கையொப்பமிட்டு இணைந்தது. சைனா, இம்மாதிரியான ஒப்பந்தங்களில் ஏற்கனவே 40 நாடுகளில் இணைந்துள்ளது.

- இது 21ம் நூற்றாண்டிற்கான, உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கான கொள்கை இதன்படி ஐரோப்பா மத்திய கிழக்கு நாடுகள் - லத்தீன் அமெரிக்கா, மற்றும் ஆப்பிரிக்காவுடன், ஏறக்குறைய 152 நாடுகளுடன் தொழில் முதலீடு பற்றிய ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

**ஜப்பான் புதுயுகத்திற்கு "ரெய்வா" என அறிவித்தது.**

- ஜப்பான் தனது புதிய ரேரசுக்கு, ரெய்வா எனப்பெயரிட்டது. ரெய்வா என்றால் அழகுப் பொருத்தம் எனப்பொருள் மே முதல் நாள் ஜப்பான் பேரரசர் அஹிடோவின் மகன், இளவரசர் கடுஹிதோ, கிருஸன்தமம் அறியனையில் 126 வது பேரரசராக பதவியேற்றார்.

- ஒவ்வொரு ஜப்பானிய பேரரசுக்கும் ஒரு பெயர் உண்டு. அது மேற்கத்திய நாட்காட்டி முறையோடு சேர்த்துப்பயன்படுத்தப்படும்.

- ஏப்ரல் 30, 2019 முடிவடைந்த யுகம் ஹிசேய் என அழைக்கப்பட்டது. அது அஹிடோவின் ஒய்வுநாளோடு முடிவடையும்.

UK – **காலநிலை அவசரப்பிரகடனம் - செய்த முதல் அரசு:**

- ஐக்கிய அரசு, (UK) காலநிலை குறித்த அவரசப் பிரகடனத்தை மே முதல் நாள் அறிவித்தது.

- முதல் முதலில் இவ்வாறு பிரகடனம் செய்த நாடு ஐக்கிய அரசு ஆகும். காலநிலை மாற்றம் குறித்த செயற்பாடுகளில் இது மிகவும் கருத்துடன் கண்காணிக்கப்பட வேண்டியதாகும்.

## GLOBAL MULTIDIMENTIONAL POVERTY INDEX 2018

- இதன் படி உலகின் ஏழ்மை நிலையுள்ளோர் 2015 – 16 ல் 28 சதவீத மக்கள். இது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகளின் போடு எடுத்த புள்ளி விவர கணக்கீடு.

- இந்தியாவில் 2015 – 16. 364 மில்லியன் ஏழை மக்கள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. 2005 – 06 ல் 635 மில்லியனிலிருந்து குறைந்துள்ளது. உலக அளவில் ஏழ்மை நிலையில் உள்ளோர் 23மூ.

**உலகின் மிகப்பெரிய e-waste மின்னியல் கழிவு மறுசுழற்சி மையம்**

- மறுசுழற்சி மையம் துபாயில் மார்ச் 26, 2019ல் என்விர சர்க் (EnviroSource) என்ற கம்பெனியால் 5 மில்லியன் டாலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

- உபயோகமற்ற மின் / மின்னணு சாதனங்கள், தகவல் தொழில் நுட்ப சாதனக்கழிவுகள் மற்றும் இதுபோன்ற கழிவுகளை மறுசுழற்சி செய்கின்றது.

- இதன் சக்தி 1,00,000 டன் 39000 டன் கழிவுகளை இது ஓராண்டில் மறுசுழற்சி செய்கிறது.

## World happiness Report 2019

- உலக மக்களின் மகிழ்ச்சி பற்றிய அறிக்கையை உலக மகிழ்வு நாள் மார்ச் 20 அன்று SDSN என்று நிறுவனம் வெளியிட்டது.

## World air Quailing Report 2018

**உலக காற்றின் தரம் குறித்த அறிக்கை**

- மார்ச் 5, 2019 அன்று வெளியிடப்பட்டது. இதன்படி தேசியத் தலைநகருக்குட்பட்ட குருக்ராம் 2018 ஆண்டு அதிகமாசுக்கு இலக்கான இடமாக கண்டறியப்பட்டுள்ளது.

- உலகிலேயே சூழல் மாசுடைந்ததலை நகரமாக டில்லி கருதப்படுகிறது. மாசு அதிகமுள்ள நகரங்களில் டில்லி, பதினோராவது இடத்தில் உள்ளது.

- சூழல் மாசு அதிகமான நாடு வங்கதேசம் அதன் அடுத்த வரிசையில் பாகிஸ்தானும் இந்தியாவும் உள்ளது மாசு மிகக்குறைந்த நாடுகள் ஜஸ்லாண்டு, பின்லாந்து, ஆஸ்திரேலியா, எஸ்டோனியா, ஸ்வீடன் ஆகியவை.

- இது ஒரு ஸ்லிஸ் நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் 300 நகரங்களின் நிலை பற்றி ஆய்ந்து அறிவித்த அறிக்கையின் சாரமாகும்.

## Multi National Maritime Cutlass express 2019:

- இது ஒரு வருடாந்திர நிகழ்வு. இவ்வாண்டு ஜனவரி 26 முதல் பிப்ரவரி 6 வரை திஜிப்தி, மொசாம்பிக் சிசிலீஸ் வட்டாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

- அனுமதிக்கப்படாத ஆழ்கடல் செயல்பாடுகளை கண்காணித்து, உறுப்புநாடுகளின் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த அமைப்பு உதவுகிறது.

- இவ்வாண்டு இந்த நிகழ்வை அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் ஆப்பிரிக்க உதவியுடன், ஆப்ரிக்க கப்பற்படை நடத்தியது.

## TAPI – GAS Pipeline Meeting:

- துருக்கிஸ்தான் (I) ஆப்கானிஸ்தான் (A) பாகிஸ்தான் (P) இந்தியா (I) விரிவுக் குழாய், கூட்டம், துருக்கிஸ்தானின் அஷ்காபாத்தில் மே 19, 2019 அன்று நடைபெற்றது.

- TAPI – திட்டமூலம், 56 இன்சு விட்டமுள்ள 1680 நீளமுள்ள குழாய்கள் மூலம், இயற்கைவாயு, 33 மில்லியன் கனஅடி ஒராண்டுக்கு துருக்கிஸ்தானத்திலிருந்து ஆப்கானிஸ்தான், பசிலிக்கா இந்திய பாக்கிஸ்தான் எல்லை வழியாக போட்டு அனுப்பப்படும்.

- இத்திட்டம் அமெரிக்கா மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

**குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த – பொலிவியா பயணம்**

- முதன்முறையாக இந்திய குடியரசுத் தலைவர் ஒருவர் பொலிவியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் (மார்ச் 28-30, 2019). இப்பயணத்தின் போது, அவர் பொலிவியாவுடன் 8 புரிதல் ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டார்.

- அவை கலாசாரம், சுரங்கத்துறை, விசா-இல்லாப்பயண முறை, கல்வித்துறை பரிமாற்றம், விண்வெளி, பாரம்பரிய மருத்துவம், தொழில்நுட்ப சிறப்புமையம் - கடல்வழி ரயில் பாசதைத்திட்டம் ஆகியத்துறைகளில் ஆகும்.

- பொலிவியாத் தலைவர், இவர் மொரால்ஸ் அய்மா, நமது குடியரசுத் தலைவர் பொலிவியா நாட்டின் மிக உரிய விருது அளித்துக் கௌரவித்தார்.

- அங்கு ஒரு மகாத்மா காந்தி அரங்கம், சாந்தா குரூஸ் பல்கலைக்கழகத்தில், நமது குடியரசுத் தலைவரால் துவக்கப்பட்டது.

**e-வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு – புதிய சட்டங்கள்**

- DIPP - தொழிற்கொள்கை மற்றும் வளர்ச்சித்துறை, அந்நிய நேரடி முதலீடு பற்றிய ஒரு மறுபரீசீலனை மேற்கொண்டது. இது உள்நாட்டு தொழில் அதிபர்களின் நலங்கருதி மேற்கொள்ளப்பட்டது.

- இதன் கொள்கைத் திருத்தங்கள், மாற்றங்கள் பிப்ரவரி முதல் நாளின்று செயல்முறைக்கு வந்தது. ஒரு மின்னணு வணிகத்தில் ஒரு தெளிவு ஏற்படவும் வழி வகுத்தது.

- 100 சதவீத, தானியங்கி விழியில் சந்தையில் நேரடி விற்பனை அனுமதிக்கப்படும். சரக்கு இருப்பு கணக்கீட்டில் அனுமதிக்கப்படமாட்டாது

**பாங்க் ஆப் பரோடா 3வது பெரிய வங்கி ஆனது**

- விஜயா பாங்க் மற்றும் தேனா வங்கியின் அனைத்துக் பாங்க் ஆப் பரோடா கிளைகளாக செயல்படத் துவங்கின. தேனா விஜயா வங்கிகள், பரோடா வங்கியுடன் இணைந்தன.

- (01.04.2019) இதனால் பாரத் ஸ்டேட் வங்கி, HDFC வங்கியடுத்து, மூன்றாம் பெரிய வங்கியாக, பரோட வங்கி உயர்ந்துள்ளது. இது ஒரு மும்முனை வங்கி இணைப்பு.

- இப்பொழுது, பரோட வங்கி 9500 கிளைகள், 13400 ATMs 85000 பணியாளர்கள், 120 மில்லியன் வாடிக்கையாளோரோடு செயல்படுகிறது.

**முதல் உயிரினம் உருவாக்கப்பட்டது**

- கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் மே மாதம் 17ம் நாள், முற்றிலும் செயற்கையான DNA கொண்டு ஒரு உயிரினத்தை உருவாக்கினர்.

- இது ஒருவகை பாக்டீரியா சாதாரணமாக, மனிதக் குடலில்லும், மண்ணிலும்வாகும் மிக மிகச் சிறிய நுண்ணுயிரி.

- இதன் மூலம் மிகச்சிறிய உயிரணு உண்டாக்கலாம். இயற்கையின் உண்டாவதைவிட குறைந்த நுண்ணிய உயிர் கொண்டு உயிர் வாழலாம் என்பது தெளிவாகிறது.

## Vigyan Samagam

- ஒரு மிகப் பெரிய அறிவியல் கண்காட்சி, விஞ்ஞான் சமகன் என்ற பெயரில், கேரு அறிவியல் மையம், வோர்லி, மும்பையில் மே 8ம் நாள், 2019 அன்று நடத்தப்பட்டது.

- இது போன்ற கண்காட்சி, அடுத்ததாக பங்களரு, கொல்கத்தா மற்றும் புதுதில்லியல் அடுத்த 11 மாதங்களுக்குள் நடத்தப்பட உள்ளது.

- இது, அணுசக்தித்துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, அறிவியல் அருங்காட்சியகம் மற்றும் கலாச்சாரத்துறையின். நிதியுதவி கொண்டு நிகழ்த்துப்பட உள்ளது.

**உலகின் முதல் மிதக்கும் அணுமின் சக்தி நிலையம் - NPP**

- ரஷ்யா, வெற்றிகரமாக, உலகின் முதல் மிதகு அணுசக்தி நிலையத்தை அமைத்து, கோடியை லோமோனஸகவில், (ராலடம் அணுசக்தி) நிலையத்தின், இரு அணு உலைகளும் (Reacher) 100 சதவீது செயற்பாட்டுத்திறனுக்கு 31.03.2019 அன்று கொண்டு வரப்பட்டது. இந்த உலைகள் நவம்பர் 2018ல் நிறுவப்பட்டன.

**மனதின் போன்ற காவல்துறையின் ரோபோ**

- கேரள முதல்வர், பினராயி விஜயன், திருவனந்தபுரத்தில் இந்தியாவின் முதல் காவல்துறை ROBO வை KP-BOT எனப் பெயரிட்டு, ஒரு துணை – ஆய்வதிகாரி (SI) யாக பொறுப்பளித்து, செயல்படுவதை துவக்கியுள்ளார்.

- போலீஸ் பணியில், ரோபோவை உபயோகிக்கும் முதல்மாநிலமாக கேரளா உள்ளது. இந்த ரோபோ ஒரு பெண்ணாகக் கருதப்படுகிறது.

- பெண் சமத்துவம், பெண்மையை ஆக்க பூர்வ சக்திகளாக சித்தரிக்கும் முகத்தான் செய்த ஏற்பாடு. அந்த ரோபோ, அலுவலக வாயிலில் இருந்து, வந்து செல்வோருக்கு தேவிய உதவிகளைச் செய்கிறது.

**சைனா முதல் செயற்கை அறிவுத்திறன் செய்தியானரை நிறுவியது**

- சிங்வா என்ற சைனீஸ் செய்தி நிறுவனம், உலகின் முதல் பெண் செயற்கை அறிவுத்திறன் (Artificial Intelligence) உள்ள செய்தியாளர் சிங் ஜியா மங்கை பிப்ரவரி 19ல் அறிமுகப்படுத்தியது.

- அவள் ஹிவாவால் சோகௌ இன்கார்ப்பரேஷன், (ஒரு தேடுதல் பொறி) கம்பெனி. அவர் உண்மையான ஒரு செய்தியாள் ''குமென்க்'' போன்ற முதாற்றத்தில் உருவாக்கப்பட்டுள்ளாள்.

**ISRO - இளம் விஞ்ஞானிதிட்டம்**

- இந்திய விண்ணியல் ஆராய்ச்சிக் கழகம், இளம் அறிவியலார் திட்டத்தை 06.03.2019 அன்று துவங்கியது.

- இது பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கானது. விண்ணியல் இருக்கும் புதிய புதிய வாய்ப்புகளில் ஊக்குவிப்பதற்காக, அவர்கயுக்கு விண்ணியல் தொழில்நுட்பம், வானவியல், வானியல் செயலிகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் கற்பிக்கப்படும்.

- ''இளமையிலேயே விதை'' என்ற கோட்பாட்டின் படி ஒவ்வொரு மாநிலம், யூனியன் பிரதேசத்திலிருந்து ICSE, CBSE, State syllabus ல் படிக்கும் 3 மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து கோடை விடுமுறையில் இருவாரப் பயிற்சி அளிக்கப்படும்.

**ISRO – GSAT - 31 – விண்ணில் செலுத்தியது**

- இந்தியாவின் GSAT-31, பிப்ரவரி 6ம் நாள், 2019 அன்று கோவோரோ விலிருந்து (பிரென்ச் கைனா) அரியன் 5-VA 247 மூலம் விண்ணில் செலுத்துப்பட்டது.

- CSAT 31 ஒரு தகவல் தொடர்புக்கான : ISRO ஆல் வடிவமைக்கப்பட்ட செயற்கைக் கோள்.

- இது இந்தியாவின் 40வது தகவல் தொடர்பு செயற்கைக்கோள் இது ISRO வின் INSAT/GSAT பாரம்பரியத்தில் உருவானது.

## Satellite Micro sat and Kalamsat

- ஸ்ரீஹரிகோட்டா, சதிஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து ராணுவத்தின் செயற்கைக்கோள் மற்றும் மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட மிகச்சிறிய கலாம்சாட்-V2 என்ற செயற்கைக் கோளும் 24.01.2019 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

- PSLV 44 – 74kg செயற்கைக்கோள் Micro sat – R மற்றும் 1.2 . கலாம்சாட் V2-குறிப்பிட்ட வெளியில் செலுத்தப்பட்டது. இந்திய சிறு ஏவுகணை, ராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பயனுக்காக வடிவமைக்கப்பட்டது.

- கலாம்சாட், a 10 கி.மி அளவுள்ள, ஒரு கனச்சதுரம். ஸ்பேஸ் கிட்ஸ், சென்னை மாணவர்களால் உருவாக்கப்பட்டது. இது மிக பளுக்குறைந்த செயற்கைக்கோள். கலாம்சாட் தான் முதன்முதலில், பூமியைச் சுற்றும் முதல் PSLV – C44, நான்காம் நிலைக் கோள்.

## ISRO வின் உன்னதி திட்டம்

- விண்வெளித்துறை அமைச்சராக இருந்த டாக்டர் ஜிதேந்திர சிங் முதல் சிறு செயற்கைக் கோள் அமைக்கும் பயிற்சித் திட்டத்தை 17.01.2019 அன்று பங்களூரு (கர்நாடகா)வில் துவக்கி வைத்தார்.

- யூனிஸ்பேஸ் நானோ சாட்லைட் அஸம்பிளி மற்றும் பயிற்சித்திட்டம் என்பது உன்னதியின் UNNAII ல் விரிவு.

- ஐக்கிய நாடுகள் சபையின், ஐம்பதாம் ஆண்டுக் கொண்டாட்டாங்களின் முகத்தான், புறவெளித் துறை சம்பந்தப்பட்ட துறையின் ஒரு முன்முயற்சி (UNISPAE-50)

## Human Space Flight Centre – ISRO – (HSFC)

- டாக்டர் k சிவன், தலைவர் ISRO, பங்களூருவில் மனிதருடன் செல்லும் விண்கலம் அமைக்கும் மையத்தை 30.01.2019 அன்று துவக்கி வைத்தார். கங்காயான் திட்டம் HSFC ன் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

- விண்வெளிக்குமுதல் மனிதனை இந்தியா அனுப்புவதற்கு 15.08.2018 அன்று தீர்மானித்துள்ளது. 2022 இல், இந்தியாவின் 75 வது சுதந்திரத்தன்று செயல்படுத்தப்படும்.

### கரும்புள்ளி – முதல் பிரதிபிம்பம்

- பன்னாட்டு விண்ணியல் அறிஞர்கள் குழு, 11.04.2019 அன்று கரும்புள்ளியின் முதல் பிரதி பிம்பத்தைப் படம் பிடித்ததாக அறிவித்தனர்.

- வாஷிங்டனில் உள்ள தேசிய அறிவியல் மையத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அந்த பிம்பம் வெளியிடப்பட்டது.

- பத்திரிகையாளர் கூட்டம் உலகின் பல்வேறு மாநகரங்களில் நடைபெற்றது. அந்த படத்தில் ஒரு பெரிய கரும் ஒட்டையும் அதைச்சுற்றி பிரகாசமான ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிற வெளிவட்டங்களும் தெரிந்தன.

- நிகழ்வுகளை பதிவு செய்யும் தொலைநோக்கி மூலம், அந்தபிம்பம் பதிவு செய்யப்பட்டது. எட்டு தொலைநோக்கிகள் அதனுடன் இணைந்து செயல்படடன. இதுவரை, அந்நதக் கரும்புள்ளி பிம்பம் ஒரு கலைஞனின் படைப்பே.

## Black Hole

- ஒரு அசாதாரணமான வானியல் விந்தை மிகக்கனமான, ஆனால் சிறிய வடிவு கொண்டது. கரும்புள்ளி / துளை மிக அடர்த்தியானது. எத்தகைய ஒளியும் அதில் ஊடுருவ முடியாது.

- கருந்துளைக்குள் செலுத்தப்படும் எந்தப் பொருளும், திரும்ப வெளிவராது. அதனுடைய ஈர்ப்பு சக்தி அசாதாரணமானது.

- கருந்துளை என்பது யாராலும் காணமுடியாது. அதனைச் சுற்றியுள்ள ஒளிமிக்க புறப்பறப்பு கொண்டு, அதன் பிம்பத்தை ஊகிக்கலாம்.

## Mission SHAKTI

- இந்தியா சாட்டிலைட்டுகளை எதிர்த்துத் தாக்கும் ஆயுத உபயோகத்து (A-SAT) மார்ச் 27, 2019 அன்று அறிவித்தது. 300 km உயரத்தில் உள்ள செயற்கைக்கோளை (Low earth orbit) வைத்து சோதனை நடத்தியது. ஓடிசா – சந்திப்பூரில் உள்ள APJ அப்துல் கலாம் தீவில் 168 வினாடிக்குப்பின் தாக்கியது.

- இந்தியா உள்நோக்கி வரும் ஏவுகணைகளை வழிமறிக்கும் சக்தியை ஏற்கனவே பெற்றுள்ளது. 2011 ஆம் ஆணடு, பிருத்வி ஏவுகளை கொண்டு, துப்பாக்கிக் குண்டுகள் தாங்கள் 600 கிமி தொலைவிலேயே எதிர்கொள்ளும் திறன் பெற்றிருக்கிறது.

- ராணுவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கழகம் (DRDO) உருவாக்கிய ஏவுகணைகள் (BMD) ஏவுகணைகளை எதிர்கொள்ளும் ஆயுதங்கள் செயற்கைக்கோள் துணைக்கொண்டு எதிர்கொள்ளும் அனைத்தும் தயார்நிலையில் உள்ளன.

- எதிர்வினை ஏவுகனை 3 நிலை கொண்டது. அதில் இருநிலையில் உறுதிவாய்ந்த ராக்கட் ஊக்கிகள் இருக்கும்.

## LEO LOW Earth Orbit

- பூமிக்கு மிகக் குறைந்த உயரத்திலிருந்த செயற்கைக் கோள் தாக்கப்பட்டது. தற்போது 2000 km உயரத்திலேயே அனைத்து செயற்கைக் கோள்களும் உலவுகின்றன.

**இந்தியாவின் ASAT திட்டம்**

- செயற்கை கோள்களை எதிர்கொண்டு அழிக்கும் திட்டம் மார்ச் 27, 2019 அன்று சோதனை செய்து வெற்றி கண்டது. அமெரிக்க 1958 லும், ரஷ்யா 1960 லும், சைனா 2007லும் சோதனை செய்தன.

- இந்திய A-SAT, மைக்ரோசாட் - R ஐ அழித்துவெற்றிகண்டது 2012- ASAT திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 600 கீ.மி. உயரத்திலுள்ள ஏவுகணைகளை எதிர்கொள்ளும் திறன் அக்னி V சோதனை நடத்தப்பட்டது.

- மிஷன் சக்தி தனிச்சிறப்பு பெற்ற ஒரு முன்னோடி நிகழ்வு. மிக அதிக உயரத்தில், மிகத் துல்லியமாக, அதன் பயன்பாடு சோதிக்கப்பட்டது.

## CCMB – புதிய என்ஸைம் கண்டுபிடிப்பு

- செல் மற்றும் மூலக்கூறுபற்றி உயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்நத, அறிவியல் அறிஞர்கள் “முஹீன் என்டோபெட்டிசெக்” என்ற என்ஸைமை, பாக்டீரியான் செல் வளர்ச்சி ஆராய்ச்சியின் போது கண்டறிந்துள்ளனர்.

- இந்தப் புதிய கண்டுபிடிப்பு, ஏற்கனவே உள்ள ஆண்டி பயாடிக்ஸ் உடைய, பாக்டீரியாவுக்கான எதிர்வினையை தடுக்கும். அது உணவுப்பாதையில் உள்ள பெருங்குடலில் உள்ள புரோட்டின் செல்களில் E-Cole இல் வினைபுரியும்.

## TN – ராணுவ உற்பத்தித் தொழிற்சாலை வளாகம்

- திருமதி நிர்மலா சீதாராமன், பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது ஜனவரி 20, 2019 அன்று, தமிழகத்தில் திருச்சிராப் பள்ளியில், பாதுகாப்புத்துறைத் தொழிற்சாலை வளாகத்தை துவக்கி வைத்தார்.

- முதல் வளாகம் உத்திரப்பிரதேசம் அலிகாரில் ஆகஸ்ட் 2018ல் துவங்கியது. இரண்டாம் வளாகம் தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அது திருச்சி, சேலம், ஹோசூர், கோவை, மதுரை மற்றும் சென்னை ஆகிய ஆறு இடங்களில் செயல்படும்.

## Test Flight of ABHYAS Drone

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகம், ABHYAS Drone என்ற சோதனை விமானத்தை, மே 14, 2014 அன்று, சந்திப்பூர் பலசோர், ஒடிசாவிலிருந்து செலுத்தியது.

- இது ஒரு அதி வேக வான்வெளித்தாக்கி (HEAT), தானியங்கி வாகனம்.

- இந்திய ஆயுதம் தாங்கிய படைக்காக, DRDO ஆல் உருவாக்கப்பட்டது. DRDO -வின் விண்கல தயாரிப்பு அமைப்பு இதன் பணிகளை மேற்கொண்டது.

## NIR BHAY நீர்ப்பயம்:

- DRDO நீர்பய் ஏவுகணையை சந்திப்பூர், ஒரிசா கடற்கரையிலிருந்து 5.4.2019 அன்று சோதனை ஓட்டம் நடத்தியது.

- அதிநவீன, எல்லாவிதமான பருவ நிலையிலும், பணி செய்யும் ஆற்றல், அதிதூர, அதிஉயரத்தில், பல்வேறு இடங்களில் இருந்து, தாக்கும் ஆற்றல், இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட ஆயுதம்.

## DRDO – சோதனை ஓட்டம் - MPATGM

- நம் நாட்டிலேயே தயாரான, குறைந்த எடையுள்ள (தாக்கிவிட்டு) சுட்டுவிட்டு மறந்து விடு" சோதனைத் தாக்குதல் செய்யப்பட்டது. இந்நிகழ்வு 14.03.2019 அன்று ராஜஸ்தானில் நிகழ்ந்தது.

- முதல் சோதனை 13.03.2019 நடைபெற்றது. இது இரண்டாது சோதனை மூன்றாம் தலைமுறை ATGM, இன்னும் அதி நவீனமான ராடார் மூலம், அடையாளம் கண்டு தாக்குதல், செய்யும் ஏவுகணைத் தயாரிப்பு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

## Anti tank Missile Heli Na

- இந்தியா ஹெலினா, கவசமில்லா தானியங்கி ஏவுகணை 7 – 8 கி.மீ பரப்பளவுக்கு தாக்குதல் செய்யக் கூடியதுமானது அது ஒடிசா சந்திப்பூரில் பிப்ரவரி 8, 2019 சோதனை செய்யப்பட்டது.

- ஒரு Chopper மூலம் சோதிக்கப்பட்டது.

- இதுவும் ஒரு DRDO வின் தயாரிப்பு

## Exercise Vayu Shakti 2019:

- இந்திய விமானப்படை, 16.02.2019 அன்று, வாயுசக்தி என்ற ஒரு பணியை மேற்கொண்டது. போர் விமானங்கள், போர் ஹெலிகாப்டர்கள் ஆகியவை பொக்ரானில் சோதனை செய்யப்பட்டன.

- இப்பயிற்சியின் போது, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட LCA தேஜஸ், அதிநவீன எடைகுறைந்த ஹெலிகாப்டர் ஆகாஷ் மற்றும் அஸ்ட்ரா வான்வெளித் தாக்கிகளின் சக்தி, வெளிபடுத்தப்பட்டது.

## BOLD KURUKSHETRA 2019:

- பாபினா ராணுவ நிலையம், ஜான்சி உத்திரப்பிரதேசத்தில், இந்தியா – சிங்கப்பூர் இணைந்து நடத்தும் 12 வது முகாம் ஏப்ரல் 8 – 11, 2019 ல் நடைபெற்றது.

- இருநாடுகளும், பரஸ்பரம் கருத்துப்பரிமாற்றங்கள் செய்து கொள்ளப்பட்டது.

## SEA VIGIL:

- இந்திய கப்பற்படை, மிக நீண்ட கடற்கரைப் பாதுகாப்பு பயிற்சி முகாம் SEA VIGIL ஜனவரி 22, 2019 ல் நடத்தியது.

- 7516.6KM நீளக் கடற்பகுதியும், பொருளாதார மண்டங்களும் அப்பயிற்சிக்குள் உள்ளடக்கப்பட்டன.

- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்கிறது. மும்பையில் ஏற்பட்டதாக்குதலுக்குப் பின், தயார் நிலையை உறுதிப்படுத்த இந்த முகாம் நடைபெற்றது.

## INS KOHASSA:

- அந்தமான் நிகோபார் தீவுகளிலுள்ள திக்லிபூரில் கூற்படையின் INS KOHASSA, கடற்படையின் தலைவர் சுனில் லம்பாவில், செயல்படுத்தப்பட்டது.

- அந்தமான் நிகோபாரில் நிறுவப்பட்ட மீண்டும் வாகனம் இது சைனாவில் கப்பல்களைக் கண்காணிக்கவும்.

- மலாக்கா ஜலசந்தி மூலம் இந்தியப் பெருங்கடலில் ஊடுருவும், நீர் மூழ்கிக் கப்பல்களை கண்காணிக்வும் நிறுவப்பட்டுள்ளது.

## Chinook (CH – 47F) HELICOPTERS INDUCTED IN IAF:

- ஏர் சீப் மார்ஷல் BS தனோவா, மார்ச் 25, 2019 அன்று, நான்கு CH – 47 சினூக், சாப்பர்களை வான்வெளியில் செலுத்தினார். இந்து ”சீனுக்” துருப்புக்கள், மற்றும் அனைத்து விதமான ராணுவத் தளவாடங்களையும், எடுத்துச் செல்லவும் உபயோகமாக இருக்கும்.

- ராணுவ உபயோகங்களுக்கு மட்டுமின்றி ”சீனுக்” மருத்துவ உதவிக்கும், பேரிடர் கால உதவி, தீயணைப்பு மற்றும் பல வளர்ச்சிப் பணிகளுக்கும் உபயோகப் படுத்தப்படுகிறது. இது மிகவும் உறுதிவாய்ந்தது. கடினமான இடங்களில் கூட எல்லா பருவநிலையிலும் பல்நோக்கு உபயோகத்துப் பயன்படும்.

- 1.5 பில்லியன் டாலர் செலவில் 15 ஹெலிகாப்டர்கள் வாங்கப்பட்டு மிக உயரத்தில் உள்ள இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

## Australian open 2019:

- ஆஸ்டிரேலியாவின் மெல்பர்ன் பார்க், மெல்பர்னில் ஜனவரி 14 to 17ல், 2019 ஆன ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் டோர்னமென்ட் நடந்தது. ஆஸ்திரேலியாவின் 107 வது நிகழ்வு, ஓபன் இராவின் 51வது நிகழ்வு, முதல் கிராண்ட்ஸ்லாம், மிகத்திறமை வாய்ந்த வீரர்கள் Singles, டபுள்ஸ் மற்றும் மிக்சட் டபுள்ஸ்ல் பங்கேற்றனர்.

## Men’s Singles

- செர்பியாவின் நோவாக் டிஜோவிக் ஸ்பெயினின் ராபேல் நடாவை 6-3, 6-2, 6-3 என்ற செட்கணக்கில் வென்று 7வது ஆஸதிரேலியன் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவின் தலைப்பை மெல்பர்னில் பெற்றார்.

## Women’s Singles

- ஜப்பானின் நவாமி ஒஸாக, செக் குடியரசின் பேட்ரா க்விடோவாவை 7-6(2) 5-7, 6-4 என்ற ரீதியில் வென்று வாகை சூடினார். இது இவரது இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் டைடில் வென்றார். இவர் US 2018ல், ஸெரினா வில்லியம்ஸை வென்றார்.

## French Open

**12வது பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்ற களிமண் தரையின் மன்னன் - ர.ஃ.பேல் நாடல்**

- ரபேல் நடால், இருமுறை சாம்பியன் டைட்டில் வென்றார். 12வது ஆடவர் ஓபன் சிங்கிள் டைடில், டாமினிக் தியம் க்கு எதிராக வென்றார். 2018ல், மறுபோட்டி நடந்தபோது 6-3, 5-7, 6-1, 6-1 என்ற கணக்கில் வென்றார். இதன் ஆடவர் - ஒற்றையர் ரெகார்டை மாற்றினார். 11 முறை வெற்றிபெற்ற, ரெகார்டை மார்கரெட் கோர்ட் உடன் சென்ற முறை பகிர்ந்த இவர், அதை முறியடித்து, 12வது முறை வென்றார்.

- நடால் 18 முறை கிராண்ட் ஸ்லாட் ஒற்றையர் தாட்டிலை வென்றவர், ரோஜர் பெடரர் 20 முறை வென்றவர். சிமோனா ஹலேப் ஆப் ஆஸ்திரேலியா, எதிர்த்து ஆடும் சாம்பியன். கால் இறுதியில் அமந்தா அனிஸிமோவாவிடம் தோற்றார். அனிஸிமோவா மிகச் சிறந்த ஆட்டக்காரர்.

## ISSF முயூனிக் உலகக் கோப்பை 2019

- சௌரப் சௌதரி 10 மீ தங்க மெடல், ஏர் பிஸ்டல் நிகழ்வில் ISS Shooting உலகக் கோப்பையை, 27 மே அன்று மியூனிச்சில் வென்றார்.

- இந்தியாவைச் சேர்ந்த ராஹி சம்ஹாத் உயர்ந்த போடியம் 25 மீ பிஸ்டல் உலகக்கோப்பை 2019 ஐ வென்றார். இந்தியாவின் தங்கம் பரிசு, மூன்றாக உயர்ந்தது. முதல் தங்கம் 10 M ஏர் ரைபிலில் அபூர்வ சந்தேலா வென்றார். ISSF உலகக்கோப்பை ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் விழா. உலக துப்பாக்கி சுடும், போட்டிக் கழகத்தால் நடத்தப்படுகிறது.

## ISSF ரைபில்/பிஸ்டல் உலகக் கோப்பை 2019

- இந்தியா இதில் மிக அதிக மெடல் வென்றது. 3 தங்கம் / வெள்ளி – பிஜிங் ரைபில்/பிஸ்டல் நிகழ்ச்சி.

**இந்தியர்கள் வென்ற தங்க பதக்கங்கள்**

- அர்ஜூன் மொளட்கில், திஷ்யாந்ஷ் சிங், பன்வார் - 10M ஏர் ரைபில் கலப்புப்பினப் போட்டி.

- மனு பாகர் மற்றும் சௌரப் சௌதரி – 10M ஏர் பிஸ்டல் கலப்பு குழு பிஸ்டல் நிகழ்வு.

- அபிஷேக் வர்மா – ஆடவர் 10M ஏர் பிஸ்டல். போட்டிகளை நடத்திய சீனா, 5 மெடல் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது.

## ISSF உலகக் கோப்பை 2019

- உலக துப்பாக்கி சுடும் விளையாட்டுக் கழகம் நடத்திய போட்டி புதுதில்லியில் பிப்ரவரி 20 முதல் 28 வரை நடைபெற்றது.

- இந்தியா 3 தங்கம் வென்றது

- அலை 1. பெண்கள் 10மீ ஏர் ரைபில் - ஆயூர்வி சன்டேலா
  2. ஆடவர் 10 மீ ஏர் பிஸ்டல் - சௌரப் சௌதரி
  3. கலப்பு 10 மீ ஏர் பிஸ்டல் - சௌரவ் + மனுபாக்கர்

**Cannes - உலகக்கோப்பை**

- கிராண்ட் மாஸ்டர் அபிஜித் குப்தா, கேனஸ் உலககிழபன் பிரான்ஸில் வென்றார்.

## Boxing World Cup 2019

- மீனா குமாரி மைஸானம், மணிப்பூர், 14.04.2019 அன்று ஜெர்மனியில் நடந்த உலகக்கோப்பை பாக்ஸிங் 54 Kg போட்டியில் தங்கம் வென்றார்.

- உலக பாக்ஸிங் உலகக் கோப்பை இந்தியா ஒரு தங்கம், இரு சில்வர், இரு வெண்கலம் வென்றது. சாக்ஷி மற்று ப்விலா பசுமடரி வெள்ளி டெல்களையும், பிங்கிராணியும் பிரவிணும் வெங்கலமும் வென்றனர். Boxing உலகக்கோப்பை, முன்னர் கெமிஸ்டிரி கப் என வழங்கப்பட்டது.

**ஆசியன் தடகளப்போட்டி 2019**

- 23வது ஆசிய தடகளப் போட்டி ஏப்ரல் 21-24 வரை கலீபா பன்னாட்டு அரங்கில் நடைபெற்றது.
- இந்தியா 17 மெடல்கள் வென்றது.
- 3 கோல்டு, 7 வெள்ளி 7 வெண்கலம்.
- பாஹ ரைன் 22 மெடல்கள் வென்றது
- 11தங்கம் 7 வெள்ளி 4 வெண்கலம்
- இந்த நிகழ்வை நடத்திய கத்தார் (Qatar) ஆறு மெடல்கல் வென்றது.

**ஸ்மிருதி மந்தனா**

- இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா ICC-ODI பிபரவரியில் நடந்த போட்டியில் முதல் நிலையில் வென்றார். நியூசிலாந்தின் எலிஸ் பெரி இரண்டாமிடத்தில் வந்தார்.

**மிதாலிராஜ்**

- இந்திய பெண்கள் கிரிக்கெட் குழு – ஒரு நாள் போட்டியில், டெஸ்ட்காப்டன் மிதாலி ராஜ் 200 UDI ல் விளையாடிய முதல் பெண் கிரிக்கெட்டர்.

**வினீஷ் போகாட்**

- இந்தியாவின் வினிஷ் போகாட், ஹரியானாவைச் சேர்ந்தவர் பாரஸ் உலக விருது பெற்ற முதல் இந்நதிய வீரர்.

- இவ்விருது 18.01.2019 அன்று வழங்கப்பட்டது. காயம் ஏற்பட்டு பலநாட்கள் போராட்டத்துக்குப்பின் கோல்ட் கோஸ்ட் காமன்வெல்த் மற்றும் ஜகார்த்தா ஆசிய விளையாட்டு போட்டியில் தங்கம் வென்றார்.

## Mc Mary Com

- உலக பாக்ஸிங் அசோஷியன் நிகழ்த்திய, லைட் - ப்ளை 45 – 48 கிலோ பிரிவில் 1700 புள்ளிகள் பெற்று பெண்கள் பிரிவில் MC மேரி கோம், முதலிடத்தில் உள்ளார் உக்ரைனின் ஹன்னா ஒஹோட்டோ, இரண்டாமிடம் பெற்றார். அவரது மதிப்பீட 1100 புள்ளிகள் மேரி கோம் ஆறு உலகச்சாம்பியன்திப் பெற்றுள்ள முதல் பெண்மணி.

**சிறப்பு ஒலிம்பிக்ஸ் உலகப்போட்டி 2019**

- 15 வது சிறப்பு ஒலிம்பிக்ஸ் உலக கோடை கால போட்டிகள் 2019 ஒரு பன்முக நிகழ்வு. செயல்திறனு சற்றுக்குறைந்த வீரர்களுக்கான சிறப்பு ஒலிம்பிக்ஸ் போட்டி. அபுதாபியில் மார்ச் 14 to 21ல் நடைபெற்றது.

- ஊடல்/மனநலக் குறைபாடுள்ள விளையாட்டு வீரர்களின் மனத் திண்ம மிகவும் பாராட்டப்பட்டது.

**இந்தியாவின் சாதனை**

- இந்தி பளுதூக்கும் வீரர்கள் மிக அதிகப் பதக்கங்களை வென்றனர். 20 – தங்கம், 33 – வெள்ளி, 43 – வெண்கலம்.
- ரோலர் ஸ்கேட்டிங்கில் இந்தியா 49 பதக்கங்கள் வென்றது. தங்கம் - 13 வெள்ளி – 20 வெண்கலம் - 16, சைக்கிள் ஓட்டும் போட்டியில் இந்திய 11 தங்கம், 14 வெள்ளி 20 வெண்கலம் வென்று 45 பதக்கங்கள் கைப்பற்றியது. முற்ற தடகள வீரர்கள் 39 பதக்கங்கள் வென்றனர்.
- தங்கம் - 5, வெள்ளி – 24, வெண்கலம் - 10.

**கேலோ இந்தியா - இளைஞர் போட்டி 2019**

- கேலோ இந்தியாவின் இரண்டாம் நிகழ்வு புனாவில் உள்ள ஸ்ரீஷிவ் சத்ரபதி விளையாட்டு அரங்கில், மனிதவள மேம்பாட்டு அமைச்சராக இருந்த பிரகாஷ் ஜாவாட்கர் முன்னிலையில் நடைபெற்றது.

- இந்தப் போட்டி ஜனவரி 9 முதல் 20 வரை புனாவில் நடைபெற்றது. போட்டியை நடத்திய மஹாராஷ்டிரா 85 தங்கம் வென்றது ஹர்யானா இரண்டாமிடமும், டில்லி மூன்றாம் இடமும் பெற்றது. மஹாராஷ்டிரா – 8, தங்கம், 62 வெள்ளி 81 வெண்கலம் (228) வீராகளின் திறமை, பிரதமரின் ‘‘இன்றும் 5 நிமிடம்’’ என்ற எண்ணத்தை நினைவூட்டியது.

**ஆந்திராவின் போலவரம் - பாசனத்திட்டம் - உலக கின்னஸ் சாதனை**

- இத்திட்டம் 2 சாதனை கின்னஸ் ரெக்கார்ட் ஏற்படுத்தியுள்ளது மிக அதிக கான்கிரீட் மற்றும் 24 மணி நேரத்திற்கு இடையிடாத கான்கிரீட் சேர்ப்பு.

- போலாவரம் நீர்ப் பாசனத்திட்டம், ஆந்திராவின், கோதாவரி மாவட்டத்தில் உள்ளது. 32100 அடி காங்கிரீட் இடைவிடாமல் 24 மணி நேரத்தில் ஊற்றப்பட்டது.

**அருணாச்சலத்தில் மிக அதிகமாக 35% கிராபைட் உள்ளது**

- புவியியல் ஆய்வின்படி, 35 சதவீத கிராபைட், இந்தியாவில் அருணாச்சலப்பிரதேசத்தில் கிடைக்கிறது.

- புவியியல் சொசைட்டி, அண்மையில் 18.05.2019 அன்று நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் இந்த புள்ளியியல் விபரத்தை அறிவித்தது.

**பீஹாரில் முதியோர் ஓய்வு ஊதியத் தொகை வழங்கும் பொதுத்திட்டம்**

- பீஹார் முதல்வர் நிதிஷ் குமார், அனைத்து முதியோருக்கும் சாதி இனப் பாகுபாடு இன்றி, அரசுப்பணியில்லாத மற்ற பணியின்று ஓய்வுபெற்ற அனைவருக்கும் ஓய்வு ஊதியத் திட்டம் அறிவித்துள்ளார். அது 01.04.2014 முதல் அமல்படுத்தப்பட்டது அரசு ஓய்வு ஊதியம் பெறாத அனைவருக்கும் ரூ.400/- மாத ஓய்வு ஊதியமாக வழங்கப்படுகிறது.

- இது தவிர பத்திரிகையாளருக்கு, அறுபது வயதுக்குப்பின் ரூ.6000/- வழங்க உத்தேசித்துள்ளது.

**கேரளா – அகஸ்தியர் கூடம் மலை ஏற பெண்களை அனுமதிக்கும்**

- கேரளவளத்துறை பெண்கள் இணையதளம் பதிவு செய்து அகஸ்திய கூடத்தில் ஏறலாம் என அறிவித்துள்ளது. அகஸ்தியர் கூடம், ஆன்மிகச் சுற்றுலாத்தலம் நெய்யாறு வனவிலங்கு சரணாலயத்தின் சரகத்திலுள்ளது.

- நவம்பர் 6, 2018 வரை பெண்கள் செல்வதற்கு ஒரு எழுதப்படாத தடை இருந்தது. கேரள உயர்நீதிமன்றம் அத்தடையை நீக்கியுள்ளது. ஆண்டுதேறும் 14 ஜனவரி முதல் மார்ச் முதல் தேதி வரை அம்மலையில் ஏறலாம்.

**குஷ் - திட்டம் - ஒடிசா ஒப்புதல்**

- ஒடிசா அரசு, இலவசமாக ஸானிடரி நாப்கின், பள்ளிச் சிறுமிகளுக்கு வழங்க முடிவு எடுத்துள்ளது. பிபரவரி 23, 2019 முதல் வழங்கப்படுகிறது.

- அரசு உதவிபெறும், மற்றும் அனைத்துப் பள்ளி மாணவிகளுக்கும் வழங்கப்படும். ஒவ்வொரு பெண்ணுக்கும் 18, பெல்ட் இல்லா நாப்கின் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும்.

## Mission Shakthi - Odisha

- ஒடிசா முதல்வர், வட்டி இல்லாக் கடனாக, ரூ.3 லட்சம் முதல் 6 லட்சம் வரை, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. இதன் மூலம் 70 லட்சம் பெண்கள் பயன்பெறுவர்.

- மிஷன் ஷக்தி மாநாட்டின் போது 05.01.2019 அன்று இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் 50000 பெண்கள் பங்கேற்றனர்.

**சிக்கிம் முதல்வர் - ஒரு குடும்பம் - ஒரு வேலைத்திட்டம்**

- சிக்கிம் முதல்வர் பவன் குமார் சம்ளிங் ஒரு குடும்பம் ஒரு அரசுப்பணி என்ற திட்டத்தை அறிவித்தார். ஒரு பணியாளர் விழாவில், காங்டாக், பட்ஜார் ஸ்டேடியத்தில் 11772 இளைஞர்களுக்கு பணிநியமனக் கடிதம் அளிக்கப்பட்டது. இத்தகைய திட்டத்தை அமல்படுத்திய முதல் மாநிலம் சிக்கிம்.

## TamilNadu – Start up and Innovative Policy 2018-23

- தமிழக அரசு புதியத்தொழில் துவக்கம் மற்றும் புதுமை கொள்கை 2018-23 ஜனவரி 18, 2019 அன்று வெளியிட்டது.

- புதுத்தொழில் கூடங்களுக்கு சரியான சூழல் அமைத்துக்கொடுத்து, தமிழகத்தை “புதுத்தொழில் கூடங்கள் / அலுவலகங்கள் அமைக்க உலகளவில் மிகச் சிறந்த / தகுந்த இடமாக ஆக்குதல்” இக்கொள்கையின் நோக்கம்.

- அரசு இக்கொள்கையை செயலாக்க ஒரு ஐந்து அமச் செயல் பணிகளை வகுத்துள்ளது. அவை (1) தகுந்த சூழலை ஏற்படுத்துதல் (2) மூலபொருள்களை கிடைக்கச்செய்தல் (3) திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பெருக்கம் (4) சமூக ரீதியான உதவிகள் (5) பன்னாடு சேவைகள் எளிதில் கிடைக்க வழிசெய்தல் / கூட்டுத்தொழிலையும் ஊக்கப்படுத்துதல்.

## Indus River Dolphin - பஞ்சாப்பின் மாநில நீர்விலங்கு

- பஞ்சாபின் முதல்வராக இருந்த கேப்டன் அமரீந்தா சிங் இந்தஸ் நதியில் உள்ள டால்பின்களை பஞ்சாப் மாநில நீர்விலங்காக பிப்ரவரி 2, 2019ல் அறிவித்தார்.

- இது ஒரு அபூர்வ பாலூட்டி விலங்கு, பியாஸ் நதியில் மட்டும் காணப்பட்டது. கட்லஜ் நதியிலும் உள்ளது.

## FeFA பெண்களுக்கான முன்னோடித் திட்டம்

- தெலுங்டகானாவில் 17.03.2019 அன்று துவக்கப்பட்டது. இரும்புச் சத்தக்குறைவு மற்றும் போதிய சத்து இல்லாத உணவால்? சிரமமப்படும் பெண்களின் நலம் காக்கும் திட்டம்.

- இது தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் மற்றும் பன்னாட்டு பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (மழை மறைவுப் பிரதேசங்களுக்கான) மூலம் செயலாக்கப்படும் திட்டம்.

- Fe- பெண்ணைக்குறிக்கும் அறிவியல் குறியீடு Fa – விடலைப் பருவத்தைக் குறிக்கும்.

- இத்திட்டம் குறிப்பாக 16 முதல் 19 வயது வரையிலான பெண்களுக்கு ஊட்டச்சத்து குறையை போக்குவதில் கவனம் செலுத்தும்.

## கிரிஷக் பந்து திட்டம் - மேற்குவங்கம்

- மேற்கு வங்க அரசு, 02.01.2019 அன்று விவசாயிகளின் துயர் நீக்குவதற்காக கிரிஷக் பந்து திட்டம் கொணர்ந்தது. விவசாயிகளுக்கு ரூ.5000 வருடத்திற்கு காரிப்பருவத்தில் 2500ம், ராபி பருவத்தில் 2500 ம் வழங்கப்படும்.

- 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஆயுள் காப்பிடு □2 லட்சத்திற்கு அரசு அளிக்கிறது. எந்தக் காரணத்தில் இறந்தாலும் காப்பீடு உண்டு. விவசாயிகள் இந்த உதவிபெற, பிரிமியம் கட்ட வேண்டியதில்லை.

## ஜெகமோகன் ரெட்டி

- YSR காங்கிரஸ் பார்ட்டி தலைவர் YS ஜகன் மோகன்ரெட்டி ஆந்திர முதல்வராக 30.05.2019ல் பதவி ஏற்றார்.

- ஆந்திர மாநிலம் பிரிந்தபின் பதவி ஏற்கும் இரண்டாவது முதல்வர் YSR காங்கிரஸ் 175க்கு 151 இடங்களைப் பெற்றது. இவருக்கு முன் சந்திரபாபு நாயுடு முதல்வராக இருந்தார்.

## பிரேம காந்த்து

- BJP ஐ சேர்ந்த, பிரேம காந்து, அருணாச்சலப்பிரதேசத்தில் முதல்வராக 29.05.2019 அன்று பதவியேற்றார். அவர் 41 இடங்கள் வென்றார்.

- ஜனதா-தை-யு – 7 இடங்களும் காங்கிரஸ் மற்றும் NPP நான்கு இடங்களிலும் மட்டுமே வெற்றி பெற்றன.

### GS லட்சுமி

- இந்திய கிரிக்கெட், பன்னாட்டு போட்டி – ரெபரி ஆக மே 13ம் நாள் நியமிக்கப்பட்டுள்ளார். ICC ஆல் மாட்ச் ரெபரி – பானலில் சேர்க்கப்பட்ட முதல் பெண்.

- லட்சுமி முதலில் உள்நாட்டு கிரிக்கெட்டில் 2008-ல் இருந்தார். மூன்று ஒரு நாள் பன்னாட்டு போட்டிகளை கண்காணித்தார். மூன்று T20 பெண்களுக்கான போட்டிகளையும் மேற்பார்வை செய்தார்.

### நவீன் பட்நாயக்

- நவீன் பட்நாயக் தொடர்ந்து 5வது முறையாக ஒரிசாவின் முதல்வராக புவஸேவரில் 29.05.2019 அன்று பதவி ஏற்றார். ஒடிசா கவர்னர், பேராசிரியர் கணோஷி லாய் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் 11 காபினட் அமைச்சர்களும் 9 அமைச்சர்களும் உறுதிமொழி ஏற்றனர்.

### மதன் லோகுர்

- மதன் B. லோகுர் பிஜி நாட்டின் உச்சநீதமன்ற நீதிபதியாக (அந்நாட்டின் குடியுரிமையில்லாதவர்கள் குழாத்திலிரந்து நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆகஸ்ட் 19, 2019ல் இப்பணியை மேற்கொள்வார். பணிக்காலம் 3 ஆண்டுகள்.

### பினாகி சந்திர கோஸ்

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி பினாகி சந்திரகோஸ் நாட்டின் முதல் “லோக்பால்” ஆக மார்ச் 20, 2019ல் குடியசுத்தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

- தேசிய மனிதஉரிமை ஆணையத்தில் (NHRC) 29.06.2017ல் இருந்து பணிபுரிந்து வந்தார்.

- இதற்குமுன் அவர், முதன்மை நீதிபதியாக ஆந்திர உச்ச நீதிமன்றத்திலும், நீதிபதியாக கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும் பணிபுரிந்தவர்.

### சுதிர் பார்கவா

- இவர் ஒன்பதாவது தலைமை தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். மற்றும் நான்கு தகவல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (01.01.2019).

- CIC – தகவல் அறியும் சட்டத்தின் (Right to Information) சட்டத்தின் மிகவம் உயர்ந்த மேல் மனு பரிசீலனை செய்யும் அமைப்பு.

### Joko Widodo

- ஜோகே விடோடோ இந்தோனேசியாவின் தலைவராக 19.05.2019 அன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் ஆணையத்தின் தகவல்படி விடோடோவும் அவரது

APOLLO STUDY CENTRE

தலைவரான மாரூப் அமினம் 55.5% மற்றும் 45.5% வாக்குகள் அதிகம் பெற்றனர். (அவர்களுக்கு எதிராக நின்றவர்கள் சுபினாடோ / ஸான்டியாவோ யுனோ)

- 20.10.2014ல் இவர் இந்தோனேசியாவின் ஏழாவது தலைவராகப் பதவியேற்றார்.
- ஜோக்கோவி என்று இவர் அழைக்கப்படுகிறார்.

**சிரில் ராம்போசா**

- தென்னாப்பிரிக்காவின் (தலைவர்) அதிபர் சிரில் ராம்போசா (ANC) மே 15, 2019 அன்று நடந்த தேர்தலில் அரிதிப்பெரும்பான்மையோடு பெற்றி பெற்றார். இவரது ஆப்ரிக்க தேசிய காங்கிரஸ் 57.73% வாக்குகளை பெற்றது.
- சென்ற ஆண்டு இதற்கு முன் அதிபராக இருந்த ஜேக்கப் ஜீமா மேல் சுமத்தப்பட்ட ஊழல் புகார் காரணமாகவும் பொருளாதாரச் சரிவு காரணமாகவும், கட்டாயமாக பதவி நீக்கம் செய்யப்பட்டு, அவரை அதிபராக்கினர்.

**டேவிட் மால்பாஸ்**

- டேவிட் மால்பாஸ், உலக வங்கியின் அடுத்த தலைவராக 09.04.2019 ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப்பதவியிலிருந்து 01.02.2019ல் ஜிம்-யாக்-நிம் வெளியேறியதை அடுத்த நியமனம் இது.
- இவர் ஒரு மூத்த கருவூல அதிகாரி, டொலால்டு ட்ரம்ப்பின் பரம அபிமானி.
- தற்காலிக உலக வங்கி தவைலராக கிரிஸ்டலினா ஜியாஜிவா பிப்ரவரி மார்ச் 2019ல் பணியாற்றினார். இவர் உலக வங்கியின் முதல் செயல் அதிகாரி.

**ஸீஸான கவுடோவா**

- இவர் கடந்த ார்ச் 30ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று ஸ்லோவாக்கியாவின் முதல் பெண் அதிபராகப் பதவியேற்றார். அன்ட்ரேஜ் கிஸ்கா இவருக்கு முன்னர் இப்பதவியில் இருந்தார். இவர் ஒரு வழக்கறிஞர் / சட்ட நிபுணர். இவர் 2016 கோல்டுமேன் சுற்றுச்சூழல் விருது அளித்து சிறப்பளிக்கப்பட்டவர். குபூடோவாவில் நிலவழக்கில் இவரது திறமைவாய்ந்த தலைமைப் பண்புமிக்க, பங்களிப்பு இவருக்குப் புகழ் தேடித்தந்தது.

**பூனம் கேத்ரபால் சிங்**

- உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியப்பகுதியின் இயக்குநராக 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர், பதினாறு உறுப்புநாடுகளால், மறுநியமனத்திற்கு 26.01.2019 ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்பதவியை வகிக்கும் முதல் பெண்.

**மனு ஸாவினி**

- உலக கிரிக்கெட் கவுன்சில், இதுவரை முதன்மை தலைவராக ஆக நியமனம் செய்துள்ளது. ICC உலகக்கோப்பை (இங்கிலாந்துக்குப்பின்) ஜீலை மாதம் 2019 இவர் பதவியேற்பார்.
- தற்போது டேவிட் ரிச்சர்ட்சின் இப்பதவியில் உள்ளார்.

**நிகோலஸ் மதுரோ**

- நிகோலஸ் மதுரோ, இரண்டாவது முறையாக வெனிசுலாவின் அதிபராக 01.01.2019 அன்று பதவியேற்றார். பதவிக்காலம் 6 ஆண்டுகள். 67.84% சதவீத வாக்குகள் பெற்று அதிபர் தேர்தலில் (May 2018) வென்றார்.

- வெனிசுலா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்று. 2025 வரை வெனிசூலா ஆயில் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் (OPEC) தலைமைப் பொறுப்பில் இருக்கும்.

**ஜேர் போலோஸாநோரோ**

- பிரேசிலின் 42வது அதிபராக, ஜேர் போல்சோ நாரோ 03.01.2019 அன்று பதவியேற்றார். மிக அதிக வாக்கு வித்தியாசத்தில், இடதுசாரி தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த பெர்னான்டோ ஹடாட் எதிராக வென்றார்.

**ஷேக் ஹசீனா**

- ஷேக் ஹசீனா, வங்கதேச தேர்தலில் மிக அதிக வாக்குகள் வெற்று மூன்றாம் முறையாக வெற்றிபெற்றார்.

- அவரது கூட்டணி அவாமி லீக் மொத்த 298க்கு 287 இடங்களை கைப்பற்றின.

- முக்கிய எதிர்க்கட்சியான, வங்கதேச தேசியக் கட்சி தேர்தலை 2014ல் புறக்கணித்தது. ஆறு இடங்களை மற்றும் கைப்பற்றியது.

**விளாடிமிர் ஒலெக்ஸான்ட்ரோவிச் செலன்ஸ்கி**

- இவர் உக்ரைனைச் சேர்ந்த அரசியல்வாதி, திரை எழுத்தாளர், நடிகர், நகைச்சுவையாளர் மற்றும் இயக்குநர்.

- இவர் 20.05.2019 அன்று ஆறாவது அதிபராகப் பதவியேற்றார்.

**நினைவில் நிற்பவர்கள்**

**தோப்பில் முகமது மீரான்**

- தோப்பில் முகமது மீரான் என்பவர் (செப்டம்பர் 26, 1944 – மே 10, 2019) தமிழ், மலையாள எழுத்தாளர் ஆவார். இவர் 1997 ஆம் ஆண்டில் தமிழக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றார்.

**விருதுகள்**

- சாகித்திய அகாதமி விருது – சாய்வு நாற்காலி (1997)
- தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது.
- இலக்கியச் சிந்தனை விருது.
- லில்லி தேவசிகாமணி விருது.
- தமிழக அரசு விருது
- அமுதன் அடிகள் இலக்கிய விருது
- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது

**எழுதிய நூல்கள்**

**புதினங்கள்**

- ஒரு கடலோரக் கிராமத்தின் கதை (1988)
- துறைமுகம் (1991)
- சாய்வு நாற்காலி (1997)

**சிறுகதைத் தொகுப்புகள்**

- அன்புக்கு முதுமை இல்லை
- அனந்தசயனம் காலனி
- 

**ஹிரா லால் யாதவ்**

- போச்புரி நாட்டுப்புற பாடகர்.
- இவர் பத்மஸ்ரீ மற்றும் யஷ் பாரதி விருது பெற்றவர்.

**அமர்பால்**

- பெங்காலி நாட்டுப்புற பாடகர்.
- சங்கீத நாடக விருது பெற்றுள்ளார்.

**ரமாகாந்த் ஆச்ரேக்கர்**

- துரோணாச்சாரியா மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்ற இவர் இந்தியாவின் மிக சிறந்த கிரிக்கெட் பயிற்சியாளர்.
- சச்சின் டெண்டுல்கர், வினோத் காம்பிளே மற்றும் பிரவின் ஆம்ரே போன்ற கிரிக்கெட் வீரர்களை உருவாக்கியவர்.

## சாதனையாளர்கள்

**பாவனா காந்த்**

- போர் விமானத்தை இயக்கும் இந்தியாவின் முதல் பெண் விமானி. இவருடன் அவனி சத்ருவேதி மற்றும் மோகன சிங் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**டியா மிர்சா**

- நிலைத்த நீடித்த வளர்ச்சியின் 17 குறிக்கோள்களை அரசிடமும் மக்களிடமும் கொண்டு செல்லும் உலகின் 17 தூதுவர்களில் இந்தியாவின் சார்பாக தேர்நதெடுக்கப்பட்டுள்ளவர்.

**லிடியன் நாதஸ்வரம்**

- சென்னையை சேர்ந்த இளம் பியானோ கலைஞர் ஆன இவர் அமெரிக்காவில் (The World's Best Show) என்ற தொலைகாட்சி நிகழ்ச்சியில், உலக அளவில் சிறந்த பியானோ கலைஞருக்கான போட்டியின் வெற்றியாளர்.
- இவர் ஏ.ஆா. ரகுமான் நடத்தும் KM இசைப் பள்ளியின் மாணவர்.

- அபிநந்தன் வர்த்தமான் (Abinandan Varthaman) இந்திய விமானப்படையில் வானூர்திச் சீறகத் தலைவர் ஆவார். புல்வாமா தாக்குதலை அடுத்து பாகிஸ்தானின் எப்-16 போர் விமானத்தை மிக் -21 விரட்டி சென்று சுட்டு வீழ்த்திய போது பாகிஸ்தான், ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து சர்வதேச நாடுகளின் நெருக்கடி காரணமாக அவர் விடுதலை செய்யப்படார்.

- இவர் 2019 ஆம் ஆண்டிற்கான மகாராஷ்டிராவின் முதலாவது பகவான் மஹாவீர் அகிம்சை விருது பெற்றுள்ளார்.

**ஹீனா ஜெய்ஸ்வால்**

- சண்டிகரை சேர்ந்த இவர் இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானப் பொறியாளர் ஆவார்.
- 2018 ஆம் ஆண்டு முதல் இந்திய விமானப்படை பொறியாளர் பிரிவை பெண்களுக்கும் அனுமதித்துள்ளது.

**சத்யரூப் சித்தாந்தா**

- உலகின் உயரமான ஏழு சிகரங்களையும் மற்றும் எரிமலை உச்சிகளையும் அடைந்த முதலாவது இளம் இந்தியர்.
- அண்டார்டிகாவில் உள்ள சிட்லி மலையின் உச்சியை அடைந்ததன் மூலம் இவர் இச்சாதனையை நிகழ்த்தினார்.

**D. குகேஷ்**

- தமிழ்நாட்டை சேர்ந்த குகேஷ், புது தில்லியில் நடைபெற்ற 17 ஆவது தில்லி சர்வதேச ஓபன் சதுரங்கப் போட்டியில் சக வீரர் டி.கே. சர்மாவைத் தோல்வியுறச் செய்து உலகின் இரண்டாவது இளைய கிராண்ட் மாஸ்டர் ஆனார். தற்போதைய நிலையில் இந்தியாவின் மிக இளவயது கிராண்ட்மாஸ்டராக உள்ளார்.

**அருனிமா சின்ஹா**

- அண்டார்டிகாவில் உள்ள வின்சென் மலையின் உயரிய சிகரத்தை அடைந்த உலகின் முதலாவது பெண் மாற்றுத் திறனாளி (கை, கால்களை இழந்தவர்).

**கிருஷ்ணகுமாரி கோலி**

- பாகிஸ்தானின் இந்திய தலித் சமூகத்தை சேர்ந்த முதலாவது பெண் உறுப்பினராவார்.
- பாகிஸ்தானின் செனட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தாரி இனத்தை சேர்ந்த முதலாவது பெண்ணும் இவரே.

**சுமன்குமாரி**

- பாகிஸ்தானின் குடிமை நீதிமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது இந்து பெண் ஆவார்.
- ரானா பகவன் தாஸ் பாகிஸ்தான் குடிமை நீதிமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது இந்தியர் ஆவார்.

## முக்கிய இடங்கள்

**தஷிகாங்க்**

- உலகின் மிக உயரமான வாக்குச் சாவடி இமாச்சல பிரதேசத்தில் உள்ள தஷிகாங்க் ஆகும்.
- கடல்மட்டத்திலிருந்து தஷ்காங்க் சுமார் 15,256 அடி உயரமானது.

**குவாலியர்**

- மத்திய மாற்றுதிறனாளிகளுக்கான அமைப்பு.

**ஹைலகாண்டி (அஸாம்)**

- நிதி அயோகின் 112 விருப்ப மாவட்டங்களில் முதலீடம் பெற்ற மாவட்டமாகும். டிசம்பர் 2018ல் 52 வது இடம் பெற்றது.

**தெகரி (உத்ரகாண்ட்)**

- இந்தியாவின் இரண்டாவது மேக ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ள இடம்.

**நாரயணபேட்டை மற்றும் முலுகு (தெலுங்கானா)**

- தெலுங்கானா அரசின் புதிய இரு மாவட்டங்கள்.

**கள்ளகுறிச்சி**

- தமிழகத்தின் 33 ஆவது மாவட்டம்.

**ஷாங்காய் (சீனா)**

- சீனாவின் ஷாங்காய் மாவட்டம் உலகின் முதலாவது 5G அகண்ட வரிசை கொண்ட மாவட்டம்.

**ரியோ டி ஜெனிரோ (பிரேசில்)**

- 2020 இல் உலக கட்டிட கலையின் தலைநகரம் என UNESCO வால் அறிவிக்கப்பட்ட நகரம்.

**அஸ்தானா**

- கசகஸ்தான் தலைநகரான அஸ்தானா நூர்சுல்தான் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## விருதுகள்

**வாழ்நாள் சாதனையாளர் விருது**

- பேராசிரியர் N.குமார் - தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்களுக்கு இந்தியாவின் தோட்டக்கலை சங்கம் வழங்கியுள்ளது.

**பண்டித கோவிந்த பலாப் பந்த் விருது**

- சுனித் குமார் கவுதம் என்பவருக்கு வழங்கப்பட்டது.

**டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கார் நோபல் பரிசு**

- சுதன்சுகுமார் கணினி சுகுமார் கணினி சுகுன் அமைப்பின் நிறுவனருக்கு டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கார் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

**மகராஷிபட்ரயன் வியாஸ்சம்மன் குடியரசுத் தலைவர் விருது**

- கிரேட்டர் நொய்டாவில் கவுதம புத்தர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் உதவி பேராசிரியர் Dr. சாக்யா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**பிரவாசி பாரதிய கம்மன் விருது**

- விஞ்ஞானி Dr. ராஜேந்திர ஜோதி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**வியாஸ் சம்மன் 2018 விருது**

- இந்தி எழுத்தாளர் லீலாதர் ஜாகுடி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**நரி சக்தி புரஸ்கார் விருது**

- குதகளி நடன மங்கை சீமா மேத்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**தேசிய நீர் விருது (2018)**

- வாரங்கலில் உள்ள காகத்யா பல்கலைக்கழகம் (தெலுங்கானா மாநிலம்) நீர் உபகோகிப்பதற்கான தேசிய நீர் விருதினை பெற்றது.

- மதுரை மாவட்டம் சுத்திரிக்கப்பட்ட மற்றும் புதிய நீர் தேங்கி அமைத்ததற்கு 2018 ம் ஆண்டிற்கான விருது வழங்கப்படடது.

- நீர் மேலாண்மைக்கான தலைசிறந்த மாநிலங்களின் வரிசையில் மகாராஷ்டிரம் குஜராத் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது.

**இயற்கை சிறப்பம்சத்திற்கான விருது 2019**

- Dr. திவ்யா கர்னாட் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

**பாரத ரத்னா விருது (2019)**

- முன்னாள் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி, சமூக ஆர்வலர் நானாஜி தேன்முக், இசைமேதை Dr. பூபன் ஹசாரிகா ஆகியோர்கள் பெற்றனர்.

**ரவிந்திர நாத் தாகூர் விருது**

- சிரிராஜ்குமார் சிங்காஜித்சிங் (2014)

- சயா நவுத் (வங்காளதேச பண்பாட்டு அமைப்பாளர் 2015) சிரிராம் சுதார் வாஞ்சி (2016) ஆகியோர் பெற்றனர்.

**4 வது கர்னாட் பரிசு**

- மத்திய அமைச்சர் பியூஸ்கோயில் அவர்களுக்கு எரி சக்தி துறையில் அவர் சாதித்த சாதனைகளுக்கு வழங்கப்பட்டது.

**2017 ம் ஆண்டிற்கான சரஸ்வரி சம்மன் விருது**

- குஜராத் கவிஞர் சித்தான்சு யாசாஸ் சந்திரா அவர்கள் பெற்றார்கள்

**சுசிலாதேவி இலக்கிய விருது**

- எழுத்தாளர் நமிதா கோகவே அவர்களுக்கு திங்க்ஸ் டு லீவ் பினகன்ட் (Things to leave behind) என்ற நூலுக்கு கிடைத்தது.

**ஒன்பது புள்ளிகள் பரிசு**

- இதழாளர் தனி சையதி அவர்கள் பெற்றார்கள்.

**சுகாதார பராமரிப்புக்கான 10 அதி முக்கிய நபர்களுக்கு UNSDG 10 என்ற அமைப்பின் விருது**

- ஆச்சார்யா பாலகிருஷ்ணா - இயக்குநர் பாதஞ்சலி ஆயூர்வேத மருத்துவம்.

**ஜோன் மிரோ விருது**

- இந்திய நடிகை நளினி மலானி பெற்றார்.

**ஜெர்மனி வேதியல் விருது**

- Dr. ரமியா அல் பக்னகன் - கழிவு நீரிவிலிருந்து வெளியேற்றும் விஷ வாயுவை நீக்குவதற்கான புதிய பசுமை தொழில்நுட்ப திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

**சாசாகாவா விருது (2019)**

- Dr. பிரமோத்குமார் மிஸ்ரா அவர்களுக்கு வழங்கப்பட்டது.
- மேன்புக்கர் பன்னாட்டு பரிசு (2019) ஜோகா அல் ஹார்த்தி – அவருடைய சொந்த படைப்பான சாயிடாட் எல் காமார் இந்த பெண்மணிதான் முதன்முதலாக அரபு மொழியில் பரிசு மற்றும் பெண்மணி ஆவார்.

**புலிட்ஸர் விருது (2019)**

1. டேவிட் பார்ஸ்டவ்
2. சுகானி கிரைக் மற்றும்
3. ருஸ் பியுட்டெனா் ஆகிய நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கையின் செய்தியாளர்கள்.

**உலக பத்திரிக்கை பட விருது (2019)**

- ஜான்மூர்

**ஏபெல் பரிசு (2019)**

- பேராசிரியை கரேன் உக்லென் பெக்.
- ஏபெல் பரிசு பெற்ற முதல் பெண்மணி.

**காமன்வெல்த் இளைஞர் விருது**

- பத்மநாபன் கோபாலன் - தமிழ்நாட்டை சார்ந்த தொழில் முனைவர் - உணவு பாதுகாப்பிற்காக அவர்களின் தொழில்நுட்பம் பத்மநாபன் கோபாலன் - 'எந்த உணவு பொருளையும் வீணாக்கக் கூடாது' என்ற நோக்கத்தில் உணவகங்கள், வீணாகும் தயாரிக்கப்பட்ட உணவுகளை பிரதிநிதிகள் மூலம் எடுத்து பசியால் வாடும்ஏழை மக்களுக்கு வழங்கும் தொழில் முனைவர்.

**காந்தி அமைதி விருது (2018)**

- யோகி சசகாவா (ஜப்பான்) – உலக சுகாதார மையத்தின் நல்லெண்ண தூதருக்கு வழங்கப்பட்டது.

# தமிழகம் சார்ந்த நடப்பு நிகழ்வுகள்

- **பிப்ரவரி 2019-ல் குடிநீர் மற்றும் நீர்பாசன திட்டத்தின்படி அத்திகடவு-அவினாஷித் திட்டத்ததிற்கு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி மு.பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார்.**
- இத்திட்டம் பவானி ஆற்றின் உபரி நீரால் கோயம்பத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு பயன்பட உள்ளது.
- இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு செலவு ரூ.1,652 கோடி ஆகும்.
- காலிங்கராயன் அணைக்கட்டில் நீர் மேல்நோக்கி எடுத்தல், செயல்பாடும் இத்திட்டத்தில் அடங்கும்.
- இத்திட்டத்தில் முதன் முதலில் அப்பகுதி ஆடுயு வாக இருந்த மாரப்ப கவுண்டர் 1957-ல் முன்மொழிந்தார்.
- மேலும் அம்ருத் நீர் வழங்கும் திட்டம் மற்றும் ஸ்மாட் சிட்டி பணிகள் போன்றவை திருப்பூரில் நடைப்பெற ரூ.1,875.47 கோடி செலவிற்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

- **சென்னை எக்மோர்ருக்கும், மதுரைக்கும் இடையே செல்லும் தேஜஸ் அதிவேக ரயில் சேவையை பிரதம மந்திரி நரேந்திர மோடி காண்ணொலிக் காட்சி மூலம் மார்ச் 1ஆம் தேதி கன்னியாகுமரியில் துவக்கி வைத்தார். இதன் பயண நேரம் 61/2 மணிகள்.**
- இந்த நிகழ்ச்சி கன்னியாகுமரியில் நடக்கும் போது தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களும், தமிழக முதலமைச்சர் எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் பங்கு பெற்றனர்.
- இந்த நிகழ்ச்சியிலேயே பிரதம மந்திரி தமிழகத்திற்கு ரூ. 2000 கோடிக்கான பல திட்டங்களை துவக்கி வைத்தார்.
- மதுரைக்கும் பரமக்குடிக்கும் இடையில் நான்குவழிகளையும், பரமக்குடிக்கும் ராமநாதபுரத்திற்கும் இடையில் இருவழிச்சாலை வழியும் துவக்கினர்.
  - ✓ இதன் நீளம் 115 கிலோ மீட்டர்.
  - ✓ இதன் மதிப்பீடு 1,134.35 கோடியாகும்.
- பரமக்குடிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் விடுப்பட்ட பணி நரிக்குளம்த்திற்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் நான்கு வழிச்சாலை துவக்கப்பட்டது.
  - ✓ இதன் நீளம் 550 மீட்டர்கள்.
  - ✓ இதன் மதிப்பீடு 27.24 கோடியாகும்.
- இரும்பாலான மேம்பாலம் மார்த்தாண்டம் சந்திப்பில் நாகர்கோயிலுக்கும் கன்னியாகுமரிக்கும் செல்லும் சந்திப்பில் துவக்கினர்.
  - ✓ இதன் நீளம் 2808 கீலோ மீட்டர்.
  - ✓ இதன் மதிப்பீடு 209.48 கோடியாகும்.
- இரும்பு மேம்பாலம் பார்வதிபுரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் சந்திப்பில் துவக்கினர்.
  - ✓ இதன் நீளம் 1,534 கிலோ மீட்டர்.
  - ✓ இதன் மதிப்பீடு 104.54 கோடியாகும்.
- <u>அடிக்கல் நாட்டிய திட்டங்கள் தேசிய நெடுஞ்சாலை</u>
- மதுரைக்கும் செட்டிக்குளத்திற்கும் இடையே நான்கு வழிச் சாலைக்கு அடிக்கல் நாட்டினர்.
- மேம்பாலம் பாண்டியன் ஹோட்டலுக்கும், மதுரையில் உள்ள செட்டிகுத்திற்கும் இடையே கட்டப்படும்.
  - ✓ இதன் நீளம் 7.3 கிலோ மீட்டர்.
  - ✓ இதன் மதிப்பீடு 679.98 கோடியாகும்.
- நான்கு வழிச்சாலை செட்டிக்குளத்திற்கும் நாதம் பிரிவுக்கும் உருவாக்க துவங்கினர்.

- ✓ இதன் நீளம் 29.39.
- ✓ இதன் மதிப்பீடு 837.61 கோடி.

- ராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் இடையே இணைப்பு ரயில்பாதை புனரமைக்கப்பட்டது.
  - ✓ இதன் நீளம் 17.2 கிலோ மீட்டர்.
  - ✓ இதன் மதிப்பீடு 208 கோடியாகும்.
- பாதுகாப்பு பூங்காவும், போக்குவரத்து அருங்காட்சியகம், முன்னால் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயினுடைய சிலையும், திரையரங்கும், ஆடிட்டோரியமும், கன்னியாகுமரியில் துவக்கப்பட்டது. மொத்த நிலப்பரப்பு 5 ஏக்கர் மதிப்பீடு 75.32 கோடிகள்.
- பாம்பன் பாலம் புதியதாக உருவாக்க நீளம் 2.05 கிலோ மீட்டர், மதிப்பீடு 250 கோடி.

➢ **மார்ச் 6ஆம் தேதி இந்திய புவியியல் குறியீடு பதிவில் ஈரோடு மஞ்சளுக்கு GI Tag என்ற சான்று வழங்கப்பட்டது.**

- ஈரோடு பகுதிதான் பாரம்பரியமாக மஞ்சள் பயிரிடப்படும் ஒரு விவசாய பூமி ஆகும்.
- GI பகுப்பில் 30வது பிரிவில் வரக்கூடிய பொருட்களுக்கு மட்டுமே இவ்வித தரச்சான்று வழங்கப்படுகிறது.
- ஜூன், ஜூலை மாதங்களில் மஞ்சள் பயிர் ஊன்றப்பட்டு ஜனவரி முதல் மார்ச் வரை அறுவடைச் செய்யப்படுகிறது.
- மஞ்சள் வகையில் பிரதானமாக சின்ன நாடான்வானி மற்றும் பெரும் நாடான் வகையாகும். ஆனால், ஈரோடு விவசாயிகள் சின்ன நாடான் வகை மஞ்சளையே பயிரிடுகின்றனர்.
- பத்தாண்டுகளுக்கு முன்னரே GI Tag சான்று கேட்டு ஈரோடு மஞ்சள் வியாபாரிகளும் மஞ்சள் இருப்பு வைப்பவர்களும் விண்ணப்பித்திருந்தனர்.

➢ **மார்ச் 6-ல் தமிழக அரசாங்கம் ஒரு புதிய ஒருங்கினைந்த ஜவுளிக் கொள்கையை வெளியிட்டது.**

- அக்கொள்கைப்படி 10% இருந்து 15% வரை அதிகபட்சம் 5 கோடி அளவிற்கு கடன் அடிப்படையில் மானியத்தை அரசு அறிவித்தது.
- ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கினைந்த செயல்பாட்டு மேம்பாட்டு திட்டம் அரசு நிதியில் தொடங்கப்படும் என்றும் கூறப்பட்டது.
- அரசு காஞ்சிபுரம், சேலம், ஆரணி மற்றும் திருபுவனம் ஆகிய இடங்களில் பட்டு பூங்காக்களை அமைப்பதற்கு உதவியும் ஊக்கமும் அளிக்கும்.
- 9% திட்ட செலவில் இருந்து அதிகபட்சமாக 9 கோடி வரை அரசு ஜவுளி பூங்காக்களை அமைப்பதற்கு வழங்கும்.
- மாநிலத்தில் விவாசாயத்திற்கு அடுத்து ஜவுளித் தொழில் இரண்டாவது முக்கிய பொருளாதார இடத்தைப் பெற்றுள்ளது. அதில் 31 லட்சம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும் ரூ.50,000 கோடி ஏற்றுமதிக்கும் வழிவகுக்கின்றது.

➢ **மார்ச் 6-ல் பெண்கள் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களுக்கான அரசு நலத்திட்டங்களை அறிவித்து பரப்புவதற்காக அம்மா சமூதாய வானொலியை முதலமைச்சர் எடப்பாடி K. பழனிச்சாமி தொடங்கி வைத்தார்.**

- தமிழ்நாடு பெண்கள் வளர்ச்சிக் கழகம் அமுல்படுத்துகின்ற வறுமை ஒழிப்பு திட்டம், சுகாதார மற்றும் சத்துணவு திட்டங்கள், போன்றவற்றை பெண்கள் சுய உதவி குழுக்கள் மூலமாக பரப்படுகின்றன.

➢ **கரூர் மாவட்டத்தில் புகலூர் 7வது வட்டமாக பெயரிடப்பட்டது. இவ்வட்டத்திற்கு தலைமையிடமாக வேலாயுதம்பாளையும் இருக்குமென முதலமைச்சர் அறிவித்தார்.**

- கரூர் மாவட்டம் திருச்சி மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட ஆரம்பத்தில் இரண்டு வட்டங்கள் மட்டுமே இருந்தன. தற்போது கரூர் மாவட்டத்தில் புகலூர் என்ற புதிய வட்டத்தை சேர்த்து மொத்தம் 7 வட்டங்கள் உள்ளன.

- **தமிழகத்தின் இளவிஞ்ஞானியான டாக்டர் N. கலைச்செல்வி காரைக்குடியில் அமைந்துள்ள CSIR-CECRIC (Central Electro Chemical Research Institute) –ன் முதல் பெண் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.**
- அவர் இந்த நிறுவனத்தில் பணியில் சேருகின்ற போதே விஞ்ஞானியாகவே சேர்ந்தார்.

- **'Hyperloop pod' என்ற புதிய வடிவத்தின் மூலமாக Space திட்டம் மற்றும் நிகழ்வில் ஜூலை 2018-ல் தொழில்நுட்ப இந்திய நிறுவனம் சென்னை, அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலில் பங்குப்பெற்றது.**
- 'International Hyperloop Pod' போட்டி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல் நகரில் Space-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துக் கொண்ட ஒரே இந்திய குழு IIT - சென்னையாகும்.
- The Hyperloop System என்ற கருத்தை முதன்முதலில் ஏற்படுத்தியவர்கள் 'Elon Musk of SpaceX' ஆகும்.

- **IIT சென்னை அவிஸ்கர் ஹைபர்லூப்பை இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஹைப்பர்லூப்பை SpaceX போட்டியில் அறிமுகப்படுத்தவுள்ளது.**

- **தமிழ்நாட்டில் மின்சாகனக் கொள்கை வெகு சீக்கிரத்தில் அறிவிக்கப்பட உள்ளது.**

- உண்டாய் போன்ற தனியார் வாகன உற்பத்தி நிறுவனங்களும், மின் வாகனத்தை துவக்க திட்டமிட்டுள்ளன.
- தமிழக அரசாங்கம் ஜெர்மனி உதவியுடன் 2000 புதிய மின் பேருந்துகளை வாங்க திட்டமிட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக 500 மின் பேருந்துகளை வாங்கி சென்னை கோயம்புத்தூர் மற்றும் மதுரைப் போன்ற நகரங்களில் இயக்க திட்டமிட்டுள்ளது.
- தமிழக அரசாங்கம் ஏற்கனவே 40 தூய நகரங்களுடன் தூய பேருந்து பிரகடணத்தில் கையொப்பம் இட்டுள்ளது.

- **சென்னைக்கு 80 கி.மீ தெற்கே உள்ள மாமண்டூரில் சென்னையின் இரண்டாவது விமான நிலையம் துவங்கப்பட உள்ளது.**
- அதை மேற்கொள்பவர் ஜிகி ஜார்ஜ் என்பவர் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் கூறினார்.
- பசுமைக்கள விமான நிலையம் ஒன்றும் 3500 ஏக்கர் பரப்பளவில் ரூ.4500 கோடி முதலீட்டில் அமைக்கப்பட உள்ளது.

- **மின்சார உற்பத்திச் செய்யும் உளையிலிருந்து வரக்கூடிய தண்ணீரிலிருந்து சுயநீரை உற்பத்தி செய்வதற்கு ஒரு புதிய தொழில்நுட்பத்தை சென்னையை அடிப்படையாகக் கொண்ட சமுத்திர தொழில்நுட்பத்தில் தேசிய நிறுவனம் (NIOT) வளர்த்துள்ளது.**
- இவ்வித திட்டம் தூத்துக்குடி மின்சார உற்பத்தி மையத்தில் ரூ.40 கோடி செலவில் அமுல்படுத்தப்பட உள்ளது.

- ஒரு நாட்களுக்கு 2-லிருந்து 3 லட்சம் லிட்டர்களை வரை இவ்வித தொழில்நுட்பத்தால் தூயதண்ணீர் உருவாக்கப்படும்.
- இது ஏற்கனவே வடசென்னை மின் உற்பத்தி ஆலையில் பரிச்சோதனைச் செய்யப்பட்டது.

- **சென்னையில் 14 பாதாள மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இந்திய பசுமை கட்டிடக் கவுன்சில் (IGBC) பிளாட்டின தரம் வழங்கப்பட்டது.**
- இத்துடன் மொத்தம் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் திட்டம் ஒன்றில் 1 GBC பிளாட்டின தரம் வழங்கப்பட்டன.
- பிளாட்டின தரம் என்பது பசுமையாக சுற்றுச்சூழல் சிறப்பாக மற்ற உரிய வசதிகளோடு உள்ள நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ் ஆகும்.

- **மார்ச் 5-ல் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணைகட்டும் பணிக்கு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி K பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார்.**
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் குமாரமங்களம் கிராமத்தையும், கடலூர் மாவட்டத்தில் உள்ள ஆதனூர் கிராமத்தையும் இனைக்கின்ற ஆற்றின் குறுக்கே இந்த கதவணைக் கட்டப்படுகிறது.
- இத்திட்டத்தை ஆகஸ்டு 4, 2014-ல் சட்ட சபையில் விதி 110 கீழ் அப்போதைய முதலமைச்சர் J. ஜெயலலிதா அறிவித்தார்.
- இதன் மதிப்பீடு ரூ.428 கோடியாகும். இதனால் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள 37,000 ஏக்கர் நீர்பாசன வசதிகளும் இத்திட்டம் வருடங்களுக்கு முடிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- **சோழர்கால திருபுவனம் சில்க் சேலைகளுக்கு GI Tag சான்று வழங்கப்பட்டது.**

- **தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்திற்கான துறையால் (DIPP) வெளியிடப்பட்ட தகவலின்படி அன்னிய நேரடி முதலீட்டை (FDI) ஈடுப்படுவதில் தமிழ்நாடு 5வது இடத்தில் உள்ளது.**
- உத்திரபிரதேசம், அர்யானவை உள்அடக்கிய புதுடெல்லி மண்டலம் முதல் இடத்தை பெற்றுள்ளது.
- மகராஷ்டிரா, டாமன் மையு, ஹாவலி இரண்டாவது இடத்தையும், கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.
- குஜராத் 6 வது இடம் பெற்றள்ளது.

- **தாவரவியல் பூங்கா மற்றும் படகு துறை சுற்றுலாவை வால்பாறை பெற உள்ளது.**
- மார்ச் 3-ல் வால்பாறையில் அதற்கான அடிக்கல்லை நகராட்சி நிர்வாக அமைச்சர் S.P. வேலுமணி நாட்டினார்.
- 4.25 ஏக்கர் அளவிற்கு ரூ.5 கோடி செலவில் தாவரவியல் பூங்காவும் ரூ.2 கோடி செலவில் படகு துறையும் அமையும்.

- **எண்ணெய் மற்றும் வாயு தொழிலுக்கான நீருக்கு உள் மனிதன் இன்றி செயல் வாகனமான 'Mikros' என்பதை சென்னை IIT-க்குள் அடங்கிய Planys Technologies என்ற புதியதாக தொடங்கி தொழில் நிறுவனம் செய்துள்ளது.**
- பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிட்டெட், இவ்வித திட்டத்திற்கு Ankur என்பது பெயர்.

- **உலகில் சிறந்த சீன உற்பத்தியாளர்களை தாண்டி ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யக் கூடிய தனியார் மிக பெரிய நிறுவனமான சென்னையில் உள்ள ரயில்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையால் ICF வந்துள்ளது.**
- 2019 ஆம் நிதியாண்டில் 3200 ரயில் பெட்டிகளை உற்பத்திச் செய்ய ICF இலக்காக நிர்ணயித்து இருந்தது.
- மாதத்திற்கு சராசரியாக 300 மேற்பட்ட ரயில் பெட்டிகளை இது உருவாக்குகிறது.
- நவீன தொழில் நுட்பங்களோடு வசதிகள் பெற்றுள்ள Train 18 என்பதை உருவாக்கிய முதல் நிறுவனம் சென்னையில் உள்ள ICF.
- தற்போது Train 18 பதிலாக வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்படுகிறது.
- இந்திய ரயில்வே மேலும் 44 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் தயாரிக்க ICF -க்கு ஆடர் கொடுத்துள்ளது.
- தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள ஐஊகு 1952 ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **அடுத்த ஆறிலிருந்து ஏழு மாதங்களுக்குள் தமிழ்நாடு விவசாய பல்கலைகழகத்தின் (TNAU) புதிய உற்பத்தி வெளியீடான நட்சத்திர மல்லிகை அருகில் உள்ள சந்தைகளுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**
- ஏற்கனவே விவசாயிகள் TNAU அறிமுகப்படுத்திய புதிய நட்சத்திர மல்லிகை வகையை தர்மபுரி, சத்தியமங்கலம் மற்றும் ராமநாதபுரம் பகுதிகளில் பயிரிட தொடங்கிவிட்டனர்.
- இந்த நட்சத்திர மல்லிகை என்பது பாரம்பரிய ஜாதி மல்லிகைக்கு பதிலாக அமைகிறது.
- சிவப்பு மற்றும் கருப்பு மண்ணின் எல்லா வகையிலும் இதை பயிரிடலாம்.

- **ஏப்ரல் 1,2019-ல் தமிழ்நாடு லோக் ஆயுக்தாவில் ஊழல் தடுப்பு ஓம்பட்ஸ்மெனாக ஓய்வு பெற்ற நீதிபதி P.தேவதாஸ் நியமிக்கப்பட்டார்.**
- ஓய்வு பெற்ற நீதிபதிகள் K.ஜெயபாலன் மற்றும் R.கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் நீதித்துறைச் சார்ந்த உறுப்பினர்களாகவும், ஓய்வுபெற்ற IAS அலுவலர் M.ராஜாராம் மற்றும் மூத்த வழக்கறிஞர் K.ஆறுமுகம் ஆகிய இருவரும் நீதித்துறை சாராத உறுப்பினர்களாகவும் அதில் நியமிக்கப்பட்டனர்.
- முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி K.வெங்கட்டராமனை தலைவராகக் கொண்ட தேடுதல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை முதலமைச்சர் K.பழனிச்சாமி தலைமையிலான தேர்வுக் குழு இம்முடிவை வெளியிட்டது.
- தமிழ்நாடு லோக் ஆயுக்தா மசோதா ஜூலை 9, 2018-ல் சட்டச்சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அது சட்டமாக நவம்பர் 13, 2018-ல் நடைமுறைக்கு வந்தது.

- **கொடைக்கானல் மலையில் பயிரிடக்கூடிய பூண்டுக்கு புவியியல் குறியீடு (GI tag) சான்று கிடைத்துள்ளது.**
- இந்த பூண்டிற்கு மிக அதிகமான மருத்துவக்குணம் உண்டு மற்றும் நீண்டகாலமும் வைத்திருக்கலாம்.
- மற்ற பூண்டு வகையெல்லாம் மிகக்குறுகியகாலத்திற்கே சேமித்து வைக்க முடியும். ஆனால் கொடைக்கானல் பூண்டுவகை 8 லிருந்து 11 மாதங்கள் வரை இருப்பு வைக்கலாம்.

- **ஜெனரல் எலக்ட்ரிக் (GE) உடனான ஒத்துழைப்புடன் ஒரு 'Cold Spray' SMART (Surface Modification and Additive Research Technologies) ஆய்வகத்தை சென்னை IIT ஏற்படுத்தியுள்ளது.**
- இந்தியாவில் கல்வி நிறுவனங்களில் இவ்வித உயர்அழுத்த கோல்டு ஸ்பிரேயை அமுல்படுத்துவது இதுவே முதல்முறையாகும்.

- இத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கத்தின் 'Uchchatar Avishkar Yojana' (UAY) திட்டம் நிதிஉதவி அளிக்கிறது.
- கல்வி நிறுவனங்களுக்கும், தனியார் துறைக்கும் இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக இத்திட்டத்திற்கு UAY திட்டத்தின்படி நிதிஉதவி அளிக்கப்படுகிறது.
- GE, IIT சென்னை, இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையுடன் சேர்ந்து அதிகமாக முதலீடு செய்யும் நிறுவனமான இந்திய அரசாங்கத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் உள்ளது.
- இந்தத் தொழிலநுட்பம் மனித மன அழுத்தங்களை குறைத்து நீண்ட நாள் வாழ்க்கைக்கு வழிவகுப்பதாக உள்ளது.

➢ **தமிழ்நாட்டில் மக்களவை தேர்தலில் போட்டியிடக்கூடிய ஒரே மூன்றாம் பாலின வேட்பாளர் ராதா ஆவார்.**

- 50 வயதான இவர், தென் சென்னை பாராளுமன்ற தொகுதியில் ஒரு சுயேட்ச வேட்பாளராக போட்டியிடுகிறார்.
- தேர்தல் ஆணையத்தின் கருத்துப்படி தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த மூன்றாம் பாலின வாக்களர்கள் 5472 ஆகும்.
- இந்தியாவில் 2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி 4.9 லட்சம் மூன்றாம் பாலின வாக்காளர் உள்ளனர்.

➢ **எட்டாம் வகுப்பு வரை எந்த மாணவர்களையும் தேர்ச்சி பெறாதவர்களாக அறிவிக்க கூடாது என தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.**

- இதை மாநில பள்ளிக்கல்வி அமைச்சர் K.A.செங்கோட்டையன் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதாவது 5ஆம் வகுப்பில் இருந்து 8ஆம் வகுப்பு வரை எந்தவித வாரிய தேர்வுகளையும் நடத்தக் கூடாது என அவர் கூறியிருந்தார்.
- 8 ஆம் வகுப்பு வரை எவரையும் தேர்ச்சி பெறாதவர்களாக முடிவு செய்யக் கூடாது என்பதை இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தை உரிமைச் சட்டத்தை (2009) ஏற்கனவே மத்திய அரசாங்கம் திருத்தி இருந்தது.

➢ **சென்னை வடக்கின் ரோட்டரி சங்க துவக்கமான கண்ணம்மா திட்டம் மாநிலத்தில் மாணவிகளுக்கு சேனிடரி நாப்கின்ஸ்களை வெற்றிகரமாக வழங்கி வருகிறது.**

- இத்திட்டம் ஆகஸ்டு 2018ல் தமிழ்நாட்டின் உத்தண்டியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 82 மாணவிகளுக்கு சேனிடரி நாப்கின்ஸ் வழங்கி தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் தற்போது சென்னை மற்றும் சென்னையை சுற்றியுள்ள 300க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது.
- அருணாச்சல முருகானந்தம் இயந்திரங்களை பயன்படுத்தி இருளர் பழங்குடி பெண்களின் நலச்சங்கத்தால் இவ்வித நாப்கின்கள் உருவாக்கப்படுகின்றன.

➢ **எழுத்தாளர்கள் வேலி ரங்கராஜன் மற்றும் யுமா வாசுகி ஆகியவர்களுக்கு சென்னையில் 2019க்கான ஆய.அரங்கநாதன் இலக்கிய விருதுகள் வழங்கப்பட்டன.**

- இந்த விருதுகள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சு.மகாதேவனால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.
- விருதுத் தொகை ரூ.1 லட்சம் மற்றும் ஒரு சான்றிதழ்.
- அவருடைய தந்தை ஏப்ரல் 16, 2017ல் இறந்ததைத் தொடர்ந்து அவரது நினைவாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

➢ **பாரதியின் எழுத்துகளை 9 இந்திய மொழிகளில் சென்னைக் குழு ஒரு ஒருங்கிணைந்த எழுத்து வடிவில் வளர்த்துள்ளது.**

- சென்னை IIT-யின் டாக்டர் சீனிவாச சக்கரவத்தி அணி இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.
- தேவனகிரி, பெங்காலி, குர்முகி, குஜராத்தி, தெளுங்கு, ஒரியா, கன்னடா, மலையாளம் மற்றும் தமிழ் ஆகிய 9 மொழிகளில் இருக்கும்.

- ஆங்கிலம் மற்றும் உருது மொழியில் இதுவரை இணைக்கபடவில்லை.

- **மாநிலத்தில் வாக்காளர் மக்கள்தொகை விகிதம் 78:80, சென்னை மாவட்டத்தில் தான் அதிகமாக உள்ளது.**
- 2019ன் கருத்துப்படி சென்னை மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை 49.59 லட்சம். இது 38.66 லட்சம் வாக்காளர்களை உள்ளடக்குகிறது.
- சென்னை மாவட்டத்திலேயே வாக்காளர் - மக்கள்தொகை விகிதத்தை அதிகமாக பெற்றிருப்பது டி.நகர் ஆகும்.(87%)

- **உலக நிலைமை முறைமையை (GPS) பயன்படுத்தி காற்றாலை மின்சார உற்பத்தியை அளப்பதற்கு TANGEDCO தொடங்கியுள்ளது.**
- இந்த முறைமை தமிழ்நாட்டில் உள்ள எல்லா காற்றாலை மின் உற்பத்தி செய்யும் தொழில்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- காற்றாலை மின்சாரத்தை GPS உதவியுடன் அமைப்பதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கு முதன் முதலாக தமிழகம் முன்வந்துள்ளது.
- தமிழ்நாடு மொத்தம் 8,322MW மின்சாரத்தை காற்றாலை மூலம் பெறுகிறது.

- **குறுகிய காலத்திற்குள் அதிக மகசூலை கொடுக்கும் என்று எதிர்பார்க்க கூடிய ஒரு புதிய வகையான கரும்பு வகையை கோயம்புத்தூரில் கரும்பு வளர்ப்பு நிறுவனம் உருவாக்கியுள்ளது.**
- இந்த புதிய ரகத்திற்கு CO 11015, என்று பெயர். இது பழையரகமான ஊழு 86032, இதைவிட 2% வீதம் அதிக பயன்பாடு உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.
- புதிய ரகத்தை பயிரிட்டு அறுவடை செய்வதற்கு 9 மாதங்கள் போதும். அதில் பழைய ரகத்திற்கு 12 மாதங்கள் தேவைப்படுகிறது.
- இந்த புதியரகமான ஊழு 11015 என்பது 20 பயிர்களை போல சோதனைச் செய்யப்பட்டு குறிப்பாக 9 சர்க்கரை ஆலைகளில் சோதனைச் செய்யப்பட்டு ‘*Sweet Bloom*’ திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது.
- இந்த ‘*sweet bloom*’ திட்டம் 2016ல் *SBI* மற்றும் *SISMA* –வால் துவங்கப்பட்டது.

- **கத்தார் நாட்டின் தோகாவில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற கோமதி மாரிமுத்துவுக்கு ரூ.10 லட்சமும், வெள்ளி பதக்கம் வென்ற ஆரோக்கிய ராஜீவுக்கு ரூ.5 லட்சமும் ஊக்கத்தொகையாக தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிச்சாமி அறிவித்தார்.**
- 800 மீட்டர் ஓட்டத்தில் கோமதி மாரிமுத்து தங்கம் வென்றார். 400 மீட்டர் கலப்பு அணி ஓட்டத்தில் ஆரோக்கிய ராஜீவ் வெள்ளி பதக்கம் வென்றார்.

- **சென்னையில் கட்டுமான மேம்பாட்டுக்காக 13வது பெருந்திட்டத்தை (TANGEDCO) Tamilnadu மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் முன்மொழிந்துள்ளது.**
- இந்த திட்டப்படி 20 துணை மின் நிலையங்களை சென்னைக்குள் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

- **தமிழ்நாடு வனத்துறை ஜுன் முதல் வாரத்தில் மன்னார் மரையேன் தேசிய பூங்காவின் வளைகுடாவில் அதிக காலம் காத்திருந்து ‘Glass bottom boats eco-tourism’ துவக்கியுள்ளது.**
- அதற்கான வாய்ப்பு சென்னை IIT-க்கு கொடுக்கப்பட்டுள்ளது.

- செந்தில்பாலன் மானிக்கம், ஓமன் சுல்தானை அடிப்படையாகக் கொண்ட ஒரு எலும்பியல் மருத்துவர் - தமிழ் மொழியில் நீண்ட கால பிரிவில் "பரங்கி மலை ரயில்நிலையம்"(அவரது துப்பறியும் கார்த்திக் ஆல்டோ தொடரின் புத்தகம் இரண்டு)
- போட்டியில் அமேசானின் '*KDP Pen to Publish*' –ஐ வென்றார்.
- விக்னேஷ் C.செல்வராஜின் இசை கவிதைக்கு தமிழில் சுருக்க படிவ விருது கிடைத்தது.
- இந்தியில் இரண்டு பெண்கள் 'நீலி'க்காக நந்தினி குமாருக்கும், 'ஆத்மன்' க்காக அனுராக்தி தேவ் சிங்லா என்பவருக்கும் குறுகிய மற்றும் நீண்ட-படிவ விருது வழங்கப்பட்டது.
- ஆங்கிலத்தில் ஐதராபாத்தை சேர்ந்த அபர்னா தாஸ் சாதுகான் தனது '*Escape Routes*' என்ற புத்தகத்திற்காக விருது பெற்றார்.
- இதை அமேசான் இந்தியா ஏற்பாடு செய்தது.

- **கோயம்புத்தூரில் வெகுசீக்கிரத்தில் ஒரு சிறுநீரக பரிமாற்ற பதிவேட்டலை தமிழ்நாடு அரசு ஏற்படுத்த உள்ளது.**
- கோவை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமணை சிறுநீரக அறுவை சிகிச்சை சிறப்பு நிபுனர் Dr.V. மங்களகுமார் இவ்வித பதிவேட்டலை அமைத்துள்ளார்.

- **எல்லா அரசு பள்ளிகளும் வகுப்பு 1 முதல் 5 வரைக்கான மத்திய உணவில் வெகுசீக்கிரம் பாலை சேர்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.**
- 2018ல் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், மத்திய உணவில் பாலை உள்ளடக்க வேண்டும் என்று எல்லா மாநிலங்களுக்கும் எழுதியிருந்தது.
- அரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய இரண்டு மாநிலங்களில் இத்திட்டத்தை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளன.

- **மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகிய 6 மாநிலங்களுக்கு வறட்சிநிலை ஆலோசனையை மத்திய அரசு வழங்கியுள்ளது.**
- தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும், அணைகளில் தண்ணீரை முறையாக சேமித்து வைக்கவும் மத்திய அரசு ஆலோசனை கூறி உள்ளது.
- இது தொடர்பான ஆலொசனையை மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு மே 18ல் வழங்கியுள்ளது.
- இவ்வித மாநிலங்களில் தண்ணீர் சேமிப்பு 20% குறைவாக விட்டதால் இவ்வித வறட்சி ஆலோசனைகளை இம்மாநிலங்களுக்கு வழங்குவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளது.

- **தேனியில் மனநல சுகாதாரத்தின் நிறுவினம் 100 படுக்கைகளுடன் தமிழகத்தின் இரண்டாவது நிறுவனமாக முழுவதும் மனநல குன்றியவர்களுக்கான சிகிச்சைக்காக திறக்கப்பட்டுள்ளது.**

- பெரும்பாக்கத்தில் முதல் முறையாக தமிழக குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் வாழும் குழந்தைகளுக்கான ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது.

- ஜுன் மாதத்திற்கான காவிரி நீரை 9.19 டி.எம்.சி அளவு தண்ணீரை தமிழகத்திற்கு வழங்குமாறு காவிரி மேலாண்மை வாரியம் கர்நாடகத்திற்கு உத்திரவிட்டுள்ளது.

- **இஸ்ரோ தனது மூன்றாவது S-TIC எனப்படும் விண்வெளி தொழில்நுட்ப அடைகாக்கும் மையத்தை தேசிய தொழில்நுட்ப மையம், திருச்சியில் தொடங்கியுள்ளது.**
- முதலாவது S-TIC ஸ்ரீகேலாவிலும், இரண்டாவது இந்தூரிலும் செயல்படுகிறது.

- **சென்னை நெமிலியில் மூன்றாவது நீர் சுத்திகரிப்பு ஆலைக்கான அடிக்கல்லை ஜப்பான் உதவியுடன் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி நாட்டினார்.**

- **கசகிஸ்தானில் இருபது வயதிற்குட்பட்டோர்களுக்கான ஆசிய ஐரோப்பிய தடகளப்போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீகிரண் நந்தகுமார் 800 மீ ஓட்டப்பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்றார்.**

- **தமிழகத்தில் மூன்றாண்டுகளுக்கு 24 மணிநேரமும் கடைகள் திறந்திருக்க ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

- 2016-இல் மத்திய அரசின் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பணிகளுக்கான மசோதா இரவு நேரங்களிலும் உணவகங்கள், திரையரங்குகள், கடைகள், வங்கிகள் மற்றும் பிற பணிபுரியும் இடங்கள் ஆகியவை 24 நேரமும் சேவை செய்ய வழிவகை செய்கிறது.

- **சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் தமிழகத்தில் இருந்து தேசிய பயிர் வளர்ச்சி பாதுகாப்பு திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

- இத்திட்டத்திற்கு 550 கோடி பயிர் பாதுகாப்பிற்கு என 2017-18ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

- அணு உலையில் இருந்து விலகியிருக்கக்கூடிய எரிபொருளை உற்பத்தி செய்யும் மையம் திருநெல்வேலியில் அமைய உள்ளது.

- உலக வங்கி தமிழக நலவாழ்வுக்கென 1990 கோடி வழங்கியுள்ளது.

- சென்னையில் மேலும் இரண்டு இடங்களில் அரசின் பெண்கள் பாதுகாப்பு மையம் தொடங்கியுள்ளது.

- திருத்துறைப்பூண்டியில் பாரம்பரிய நெல் திருவிழா நடைபெற்றது. இதில் 174 நெல் வகைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இவ்விழாவின் முன்னோடி நெல் ஜெயராமன் ஆவார்.

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- கீழடியில் இரண்டாம் ஆய்வுகள் தொடங்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

- தமிழக அரசு 499.68 கோடி குடிமராமத்து திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

- ஜெர்மன் வங்கியிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் பேரிடர் மேலாண்மைக்காக 40 கோடி ரூபாய் பெற்றுள்ளது. இதன் மூலம் கூவம், அடையாறு, கோவளம் மற்றும் கொசஸ்தலை ஆறு ஆகிய ஆறுகள் தூய்மைப்படுத்தப்படவுள்ளன.